# சோதிடமலர்

## SOTHIDA MALAR




உள்ளே..........

- கோள்களும் கால அளவுகளும்
- எண் சோதிடமும், அதன் உண்மைகளும்
- நடிகைகளில் ராணியாக வருவேனா?
- ஆய்வு மன்றம்
- வானியற் காட்சிகள்

இன்னும் பல


க்ஷய ஆண்டு ஐப்பசி மீ

(17-10-86—15-11-86)

விலை ரூபா: 3-00

மாதவெளியீடு

உ


# சோதிடமலர்

SOTHIDA MALAR

✻

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ இ. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

✻

க்ஷய ௵ ஐப்பசி ௴

( 17 - 10 - 86 )

| | |
|---|---|
| மலர் 9 | இதழ் 7 |


மயூராதி ரூடம் மகாவாக்ய கூடம்
மனோகாரி தேகம் மகச்சித்த கேஹம்
மஹீதேவ தேவம் மகாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோகபாலம்.

ஆறு வழுதே யயில்வே லரசே
ஞாறு கரனே நவிலத் தகுமோ
யாறுகிய வென்னே விழுங்கி வெறுந்
தாறுய் நிலேநின் றதுநற் பரமே.

செல்வத்திற்கு நல்நடத்தை நாணயமும், வீரத்திற்கு அழகு வாய் அடக்கமும், கல்விக்கழகு பணிவும் விநயமும், அறிவுக் கிழகு அமைதியும் பொறுமையும், தவத்திற்கு அழகு கோபமின்மையும், வீரனுக்கழகு மன்னிப்பதும், தர்மத்திற்கு அழகு பிரதிபலன் கருதாமையும், நல்லோர்க்கு அழகு ஒழுக்கமும் பொறுமையுமாகும். அதுபோல அழகுக்கழகனுக விளங்கும் முருகனே வணங்குவதே பக்தர்க்கழகாகும்.

ஆசையடக்கல், பொறுமை கடைப்பிடித்தல், கர்வமடக்கல், பாவம்நீக்குதல்; உண்மையே பேசுதல், நல்லோர் வழிநடத்தல், பெரியோரை உபசரித்தல், பகைவரையும் மதித்தல், தன்புகழைக் காப்பாற்றுதல், கவலேயடைந்தோரைத் தேற்றுதல் ஆகிய இவையெல்லாம் நல்லோரின் நற்செயல்களாகும்.

## இம்மாத விசேடங்கள்

### ஐப்பசி வெள்ளி

கலியுகத்தெய்வமான கந்தப்பெருமானுக்குரிய விரதநாளாகும். ஐப்பசிமாதத்து முதல் வெள்ளி தொடக்கம் மூன்று வருடங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டும். அத்தினமன்று முருகனின் திருவுருவத்தை பொன் வெள்ளிலோகங்களில் செய்வித்து கும்பம்வைத்து ஆவாகித்து அர்ச்சனே வழிபாடாற்றி கோவிலிலும் சென்று வழிபட்டு, அன்று பகல் ஒருபோதுணவருந்தி இரவில் பால் பழம் மட்டும் உண்டு மறுநாட்காலே கர்மானுஷ்டானங்களே முடித்து அக்கும்பத்தையும் அவ்வுருவத்துடன் கூட பிராம்மணருக்குத் தானமாகக் கொடுத்து அவரின் ஆசிபெற்று ஒன்பது நாளிகைக்குள்ளாக பாரணே செய்து கொள்ளவேண்டும்:

### ஸ்கந்தசஷ்டி

தேவர்களின் துயர் தீர்க்கும் பொருட்டு சுப்பிரமணியக்கடவுள் சூரனேடு போர்செய்து அவனே ஞானசக்தியாகும் வேற்படையால் சங்காரம் செய்தார் என்பது புராணவரலாறு. இவ்வாறு தேவர் துயர்களேந்த முருகப்பெருமானே வழிபடுவதால் எமது இடர்களும் தீரும் என்பது மரபு வழிவந்த நம்பிக்கையாகும். இதன்படி இவ்விரதத்தை அனுட்டிப்பதற்கு, ஐப்பசிமாத பூர்வபக்ஷ பிரதமைத்திதி முதல் சஷ்டிவரை (ஆறுநாள்) உள்ள தினங்கள் உரியதாகும். விரதமனுஷ்டிப்போர் ஆறு நாளும் உபவாசமிருத்தலும் முதல் ஐந்து தினங்களும் ஒருபொழுதுணவருந்தி சஷ்டியன்றுமட்டும் உபவாசமிருத்தலும் விரதமுறைகளாகும்.

### தீபாவளி

ஐப்பசிமாத கிருஷ்ணபக்ஷத் சதுர்த்தசி திதியன்று இரவு நரக சதுர்த்தசி ஸ்நானம் செய்து மறுநாள் புதிய ஆடைகள் அணிந்து மகிழ்வது வழமையான தீபாவளி விசேடமாகும். நரகாசுரனேக் கொன்று உலகுக்கு விமோசனமளித்த கிருஷ்ணணின் பெருமையை- சத்யபாமாவின்- வீரத்தை நினேவூட்டுவதற்காக, நரகாசுரனின் விருப்பப்படி இருள்சூழ்ந்த உலகை ஒளிமயமாக்கிய கண்ணபிரானின் அருளேவியந்து அவ்வசுரனது மோக்ஷப்பிராப்திக்காக தீபங்கள் ஏற்றி புத்தாடை அணிந்து மகிழ்வதே இப்பண்டிகையின் குறிக்கோளாகும்.

# நாள் எப்படி?

ஐப் 1 வெள் (17-10-86) பூரணை பி.இ. 12-27 வ. ரேவதி பி.இ. 12-00 வரை, அமிர்தம். பூரணை விரதம், காமேஸ்வரி பூஜை. சுபகருமங்கட்கு நன்று. ராகு 10-32—12-02

ஐப் 2 சனி (18-10-86) பிரதமை பி.இ. 1-54 வரை. அசுவினி பி.இ. 1-35 வரை, சித்தம். முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-02—10-32

ஐப் 3 ஞாயி (19-10-86) துவிதியை பி.இ. 3-28 வ. பரணி-மரணம் பி.இ. 1-35 வரை, அசுபதினம். ராகு 4-32—6-02

ஐப் 4 திங் (20-10-86) திரிதியை பி.இ. 5-19வரை. கார்த்திகை முழுதும், மரணம். கார்த்திகைவிரதம் சுபதினமன்று. ராகு 7-32—9-02

ஐப் 5 செவ் (21-10-86) சதுர்த்தி முழுவதும், கார்த்திகை காலை 6-05 வரை, சித்தாமிர்தம். சுபகருமங்கட்கு நன்றல்ல. ராகு 3-02—4-32

ஐப் 6 புத (22-10-86) சதுர்த்தி காலை 7-35 வரை. ரோகிணி காலை 8-51 வரை, சித்தம். கரிநாள். அவசியகருமங்கள் செய்யலாம்
ராகு 12-02—1-32

ஐப் 7 வியா (23-10-86) பஞ்சமி பகல் 10-04 வ. மிருகசீரிடம் இரவு 11-49 வரை, மரணம். அசுபதினம். ராகு 1-32— 3-02

ஐப் 8 வெள் (24-10-86) ஷஷ்டி பகல் 12-57 வரை. திருவாதிரை பகல் 2-47 வரை, சித்தம். அசுபதினம். ராகு 10-32—12-02

ஐப் 9 சனி (25-10-86) ஸப்தமி-மரணம் பகல் 2-54 வரை, புனர்பூசம் மாலை 5-54 வரை, சுபதினமல்ல. ராகு 9-02—10-32

ஐப் 10 ஞாயி (26-10-86) அஷ்டமி மாலை 4-51வ. பூசம்-சித்தம் மாலை 7-58 வரை, அசுபதினம். ராகு 4-33—6-03

ஐப் 11 திங் (27-10-86) நவமி மாலை 6-14 வரை. ஆயிலியம்-சித்தம் 9-48 வரை, சுபகருமங்களை விலக்குக. ராகு 7-33—9-03

ஐப் 12 செவ் (28-10-86) தசமி மாலை 6-54 வரை. மகம் இரவு 10-58 வரை சித்தம், வயற் கருமங்கள் செய்யலாம். ராகு 3-03—4-33

ஐப் 13 புத (29-10-86) ஏகாதசி மாலை 6-49 வ. பூரம் இரவு 11-22 வரை, அமிர்தம். சர்வஏகாதசி சுபதினம். ராகு 12-03—1-33

ஐப் 14 வியா (30-10-86) துவாதசி மாலை 5-58 வ. உத்தரம்-மரணம் இரவு 11-02 வரை, சுபகருமங்கட்கு நன்றல்ல. 1-33—3-03

ஐப் 15 வெள் (31-10-86) திரயோதசி மாலை 4-24 வரை, அத்தம் இரவு 10-00 வரை, அமிர்தசித்தம். பிரதோஷவிரதம் சுபகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 10-33—12-03

ஐப் 16 சனி (1-11-86) சதுர்த்தசி பகல் 2-13 வரை. சித்தம்-மரணம் இரவு 8-24 வரை, அமாவாசை விரதம், கேதாரகௌரிவிரதம், தீபாவளி. அசுபதினம். ராகு 9-04—10-34

ஐப் 17 ஞாயி (2-11-86) அமாவாசை பகல் 11-32வ. சுவாதி-சித்தம் காலை 6-20 வரை, ஸ்கந்தஷஷ்டி ஆரம்பம் அசுபதினம். ராகு 4-34—6-04

ஐப் 18 திங் (3-11-86) பிரதமை காலை 8-32 வ. துவிதியை பி.இ. 5-19 வரை, விசாகம்-மரணம் மாலை 4-01 வரை, சுபதினமன்று.
ராகு 7-34—9-04

ஐப் 19 செவ் (4-11-86) திரிதியை பி.இ. 2-05 வ. அனுஷம்-சித்தம் பகல் 1-30 வரை, வயற் கருமங்கள் செய்யலாம். ராகு 3-04—4-34

ஐப் 20 புத (5-11-86) சதுர்த்தி இரவு 10-57 வ. கேட்டை-சித்தம் இரவு 11-02 வரை, சதுர்த்தி விரதம் கரிநாள். சுபதினமன்று.
ராகு 12-04—1-34

ஐப் 21 வியா (6-11-86) பஞ்சமி இரவு 8-04 வரை. மூலம் காலை 8-45 வரை, சித்தம். சுபதினமன்று
ராகு 1-34—3-04

ஐப் 22 வெள் (7-11-86) ஷஷ்டி மாலை 5-34 வரை. பூராடம்-மரணம் காலை 6-46 வரை, உத்தராடம் சித்தம் பி.இ. 5-12 வரை, ஸ்கந்தஷஷ்டிவிரதம் சுபதினம். ராகு 10-25—12-05

ஐப் 23 சனி (8-11-86) ஸப்தமி பகல் 3-31 வரை. திருவோணம் பி.இ. 4-08 வரை, சித்தம். சுபதினமன்று. ராகு 9-05—10-05

ஐப் 24 ஞாயி (9-11-86) அஷ்டமி பகல் 2-02 வ. அவிட்டம்-மரணம் பி.இ. 3-36 வரை, அசுபதினம். ராகு 4-35—6-0

ஐப் 25 திங் (10-11-86) நவமி பகல் 1-02 வரை, சதயம்-சித்தம் பி.இ. 2-37 வரை, அசுபதினம். ராகு 7-36—9-06

ஐப் 26 செவ் (11-11-86) தசமி பகல் 12-38 வரை, பூரட்டாதி-மரணம் பி.இ. 4-09 வரை, அசுப தினம். 3-06—4-36

ஐப் 27 புத (12-11-86) ஏகாதசி பகல் 12-45 வ. உத்தரட்டாதி-சித்தம் பி.இ. 5-12 வரை, ஸர்வ ஏகாதசி விரதம். நற்கருமங்கள் செய்யலாம். ராகு 12-06—1-36

ஐப் 28 வியா (13-11-86) துவாதசி பகல் 1-22 வ. ரேவதி முழுவதும் சித்தம், பிரதோஷவிரதம், சுப கருமங்கட்கு உகந்ததினம். ராகு 1-37—3-07

ஐப் 29 வெள் (14-11-86) திரயோதசி பகல் 2-27வ. ரேவதி காலை 6-41 வரை, அமிர்தம். சுபகருமங் கட்கு ஏற்றதினம். ராகு 10-37—12-07

ஐப் 30 சனி (15-11-86) சதுர்த்தசி பகல் 3-54 வ. அசுவினி காலை 8-33 வரை, சித்தம் அசுபதினம் ராகு 9-07—10-37

## பூரண சந்திர கிரகணம்

ஐப்பசி 1உ (17-10-86) வெள்ளிக்கிழமை இரவு பூரண சந்திரகிரகணம் நிகழும். அன்று இரவு 10-59க்கு கிரகணம் ஆரம்ப மாகும். 12-11மணி முதல் 1-25மணிவரை சந் திரன் முற்றாக மறைக்கப்பட்டிருக்கும்; பின்னிரவு 2-37 மணிக்கு கிரகணம் மோக்ஷ மடையும். இக்கிரகணத்தினால் அரசியல் உயர்பதவியில் இருப்பவர்களுக்கு ஆபத்துக் கள் நேரிடும். பொதுமக்களுக்கு பசி, பிணி, பீடை, அகாலமரணங்கள் என்பன நிகழும்.

# 12 மாதங்களிலும் பிறந்தவர்களது பலன்கள்

சித்திரை முதல் பங்குனி வரையான 12 மாதங்களையும் மேஷமுதல் மீனமீறாக 12 ராசிக ளாகக் கொண்டு அவ்விராசிகளில் சூரியன் நிற்கப் பிறந்தவர்கள் அடையும் பொதுவான பலன்களை மஹாநந்திசரின் நந்திநூல் பின்வருமாறு கூறு கிறது.

சித்திரையில் பிறந்தவர்கள் எவ்வளவு கடும் முயற்சி எடுப்பினும் கல்வியில் சித்திபெய்துவது அரிது. வித்தைகளும் கிட்டாது;

வைகாசியில் பிறந்தவர்கட்கு எதைப் படிப்பி னும் உடன் மனதில் பதியும். சகல கல்வியும் வித் தையும் இவர்களுக்குச் சித்திக்கும்.

ஆனியில் பிறந்தவர்கட்கு சகலபாக்கியங்களு முண்டாகும். சகல வித்தையும் கிட்டும். பூமி, வாகனம், வீடு, பேறு யாவும் கிடைக்கும்.

ஆடியில் பிறந்தவர்களுக்கு எவ்விடத்திலும் நிலையான வாழ்க்கை அமைவது கஷ்டம். கஷ்ட ஜீவியமே இவர்கள் நடாத்துவர்.

ஆவணியில் பிறந்தவர்கள் வீரதீரம் நிறைந் தவர்கள். சண்டையில் வல்லவர்கள்; மனவைராக் கியமுடையோர் எடுத்த காரியத்தை முடித்து விடுவர்.

புரட்டாதியில் பிறந்தவர்கள் சகல வேதாந்த யோக நூல்களிலும் வல்லவராவர். சகல கலைகளை யும் அறிந்தவர்கள்; வாழ்வில் பெரும் பேறடை வர்.

ஐப்பசியில் பிறந்தவர்கள் மன அடக்கம் நிறைந்தவர்கள். அஷ்டமா சித்திகளை அடைந்தி டுவர்; வாழ்க்கையில் பெரும் யோகத்தைப்பெறு வார்கள்;

கார்த்திகையில் பிறந்தோர் பொன், பொருள், வீடு, வாகனம், நிலம் எனும் சகல செல்வங்களை யும் பெற்று பெருவாழ்வு வாழ்வர்.

மார்கழியில் பிறந்தோர்க்கு சகல பாக்கியங் களுமுண்டாகும்; ராஜயோக வாழ்க்கை வாழ்வர்,

தை மாதத்தில் பிறந்தவர்கள் அன்றாடம் வேலைசெய்து கஷ்டஜீவனமே நடாத்தவேண்டிய நிலையிலிருப்பார்கள்.

மாசி மாதத்தில் பிறந்தவர்கள் ஆசைகளை அடக்கி இறைவனைக் காணும் நிலையில் முத்திய டைவர். சகல வசதிகளையும் பெறுவர்.

பங்குனியில் பிறந்தவர்கட்கு எல்லா கலைகளி லும் வெற்றியும் அறிவுத் திறனும் புத்திக்கூர்மை யும் சகல ஜனங்களும் போற்றும் வகையில் வாழ் வும் அமையும்.

# உதயலக்கினம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

க்ஷய வரு ஐப்பசி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (17-10-86 முதல் 15-11-86 வரை)

| இங் அக் | தமி ஐப்ப | வாரம் | துலா ம.மி. முதல் (காலை) | துலா ம.மி. வரை | விருச்சி ம. மி. வரை (காலை) | தனுசு ம. மி. வரை (பகல்) | மகரம் ம. மி. வரை (பகல்) | கும்பம் ம. மி. வரை (பி.ப) | மீனம் மி. ம. வரை (மாலை) | மேடம் ம. மி. வரை (இரவு) | இடபம் ம. மி. வரை (இரவு) | மிதுன ம. மி. வரை (இரவு) | கடகம் ம. மி. வரை (பி.இ) | சிங்கம் ம. மி. வரை (பி.இ) | கன்னி ம. மி. வரை) (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | வெள் | 6 3 | 8 7 | 10 18 | 12 26 | 2 22 | 4 6 | 5 49 | 7 38 | 9 41 | 11 52 | 2 0 | 4 0 | 5 59 |
| 18 | 2 | சனி | 6 00 | 8 3 | 10 14 | 12 22 | 2 18 | 4 2 | 5 45 | 7 34 | 9 37 | 11 48 | 1 56 | 3 56 | 5 55 |
| 19 | 3 | ஞாயி | 5 56 | 7 59 | 10 10 | 12 18 | 2 14 | 3 58 | 5 41 | 7 30 | 9 33 | 11 44 | 1 52 | 3 52 | 5 51 |
| 20 | 4 | திங் | 5 52 | 7 55 | 10 6 | 12 14 | 2 10 | 3 54 | 5 37 | 7 26 | 9 29 | 11 40 | 1 48 | 3 48 | 5 47 |
| 21 | 5 | செவ் | 5 48 | 7 51 | 10 2 | 12 10 | 2 6 | 3 50 | 5 33 | 7 22 | 9 25 | 11 36 | 1 44 | 3 44 | 5 43 |
| 22 | 6 | புதன் | 5 44 | 7 46 | 9 57 | 12 5 | 2 1 | 3 45 | 5 28 | 7 17 | 9 20 | 11 31 | 1 39 | 3 39 | 5 38 |
| 23 | 7 | வியா | 5 39 | 7 42 | 9 53 | 12 1 | 1 57 | 3 41 | 5 24 | 7 13 | 9 16 | 11 27 | 1 35 | 3 35 | 5 34 |
| 24 | 8 | வெள் | 5 35 | 7 38 | 9 49 | 11 57 | 1 53 | 3 37 | 5 20 | 7 9 | 9 12 | 11 23 | 1 31 | 3 31 | 5 30 |
| 25 | 9 | சனி | 5 31 | 7 34 | 9 45 | 11 53 | 1 49 | 3 33 | 5 16 | 7 5 | 9 8 | 11 19 | 1 27 | 3 27 | 5 26 |
| 26 | 10 | ஞாயி | 5 27 | 7 30 | 9 41 | 11 49 | 1 45 | 3 29 | 5 12 | 7 1 | 9 4 | 11 15 | 1 23 | 3 23 | 5 22 |
| 27 | 11 | திங் | 5 23 | 7 26 | 9 37 | 11 45 | 1 41 | 3 25 | 5 8 | 6 57 | 9 0 | 11 11 | 1 19 | 3 19 | 5 18 |
| 28 | 12 | செவ் | 5 19 | 7 22 | 9 33 | 11 41 | 1 37 | 3 21 | 5 4 | 6 53 | 8 56 | 11 7 | 1 15 | 3 15 | 5 14 |
| 29 | 13 | புதன் | 5 15 | 7 18 | 9 29 | 11 37 | 1 33 | 3 17 | 5 0 | 6 49 | 8 52 | 11 3 | 1 11 | 3 11 | 5 10 |
| 30 | 14 | வியா | 5 11 | 7 14 | 9 25 | 11 33 | 1 29 | 3 13 | 4 56 | 6 45 | 8 48 | 10 59 | 1 7 | 3 7 | 5 6 |
| 31 | 15 | வெள் | 5 7 | 7 11 | 9 22 | 11 30 | 1 26 | 3 10 | 4 53 | 6 42 | 8 45 | 10 56 | 1 4 | 3 4 | 5 3 |
| 1 | 16 | சனி | 5 4 | 7 7 | 9 18 | 11 26 | 1 22 | 3 6 | 4 49 | 6 38 | 8 41 | 10 52 | 1 0 | 3 0 | 4 59 |
| 2 | 17 | ஞாயி | 5 0 | 7 3 | 9 14 | 11 22 | 1 18 | 3 2 | 4 45 | 6 34 | 8 37 | 10 48 | 12 56 | 2 56 | 4 55 |
| 3 | 18 | திங் | 4 56 | 6 59 | 9 10 | 11 18 | 1 14 | 2 58 | 4 41 | 6 30 | 8 33 | 10 44 | 12 52 | 2 52 | 4 51 |
| 4 | 19 | செவ் | 4 52 | 6 55 | 9 6 | 11 14 | 1 10 | 2 54 | 4 37 | 6 26 | 8 29 | 10 40 | 12 48 | 2 48 | 4 47 |
| 5 | 20 | புதன் | 4 48 | 6 51 | 9 2 | 11 10 | 1 6 | 2 50 | 4 33 | 6 22 | 8 25 | 10 36 | 12 44 | 2 44 | 4 43 |
| 6 | 21 | வியா | 4 44 | 6 47 | 8 58 | 11 6 | 1 2 | 2 46 | 4 29 | 6 18 | 8 21 | 10 32 | 12 40 | 2 40 | 4 39 |
| நவ 7 | 22 | வெள் | 4 40 | 6 43 | 8 54 | 11 2 | 12 58 | 2 42 | 4 25 | 6 14 | 8 17 | 10 28 | 12 36 | 2 36 | 4 35 |
| 8 | 23 | சனி | 4 36 | 6 39 | 8 50 | 10 58 | 12 54 | 2 38 | 4 21 | 6 10 | 8 13 | 10 24 | 12 32 | 2 32 | 4 31 |
| 9 | 24 | ஞாயி | 4 32 | 6 36 | 8 47 | 10 55 | 12 51 | 2 35 | 4 18 | 6 7 | 8 10 | 10 21 | 12 29 | 2 29 | 4 28 |
| 10 | 25 | திங் | 4 29 | 6 32 | 8 43 | 10 51 | 12 47 | 2 31 | 4 14 | 6 3 | 8 6 | 10 17 | 12 25 | 2 25 | 4 24 |
| 11 | 26 | செவ் | 4 25 | 6 28 | 8 39 | 10 47 | 12 43 | 2 27 | 4 10 | 5 59 | 8 2 | 10 13 | 12 21 | 2 21 | 4 20 |
| 12 | 27 | புதன் | 4 21 | 6 24 | 8 35 | 10 43 | 12 39 | 2 23 | 4 6 | 5 55 | 7 58 | 10 9 | 12 17 | 2 17 | 4 16 |
| 13 | 28 | வியா | 4 17 | 6 21 | 8 32 | 10 40 | 12 36 | 2 20 | 4 3 | 5 52 | 7 55 | 10 6 | 12 14 | 2 14 | 4 13 |
| 14 | 29 | வெள் | 4 14 | 6 17 | 8 28 | 10 36 | 12 32 | 2 16 | 3 59 | 5 48 | 7 51 | 10 2 | 12 10 | 2 10 | 4 9 |
| 15 | 30 | சனி | 4 10 | 6 13 | 8 24 | 10 32 | 12 28 | 2 12 | 3 55 | 5 44 | 7 47 | 9 58 | 12 6 | 2 6 | 4 5 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஐப்பசி 30உ. (15-11-86) பகல் 10-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளவதை கவனிக்க. (8-24—10-32) தனுசுலக்னம்

# ஐப்பசி மாதக் கிரகநிலை

<table>
<tr><td>மீனம்</td><td>மேடம்</td><td>இடபம்</td><td>மிதுனம்</td></tr>
<tr><td>ராகு</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>கும்பம்<br>குரு</td><td colspan="2" rowspan="2">ஐப்பசி மாதக்<br>கிரக நிலை</td><td>கடகம்</td></tr>
<tr><td>மகரம்<br>செவ்</td><td>சிங்கம்</td></tr>
<tr><td>நெப்</td><td>யூரே,சனி</td><td>சூ, புத<br>சுக்</td><td>கேது</td></tr>
<tr><td>தனுசு</td><td>விருச்சிகம்</td><td>துலாம்</td><td>கன்னி</td></tr>
</table>

## கிரக மாற்றங்கள்

7உ (23-10-86) காலை 8-29க்கு விரு-புத
25உ (10-11-86) இரவு 11-18க்கு துலா-புத
18உ புதன் வக்ராரம்பம்
23உ புதன் அஸ்தமனம்
25உ குரு வக்கிரத்தியாகம்
17உ சுக்கிரன் அஸ்தமனம்
24உ சுக்கிரன் உதயம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஐப் | 1உ | (17-10-86) | இரவு | 12-00 | முதல் | மேடம் |
| | 4உ | (20-10-86) | பகல் | 10-12 | ,, | இடபம் |
| | 6உ | (22-10-86) | இரவு | 10-19 | ,, | மிதுனம் |
| | 9உ | (25-10-86) | பகல் | 10-54 | ,, | கடகம் |
| | 11உ | (27-10-86) | இரவு | 9-48 | ,, | சிங்கம் |
| | 13உ | (29-10-86) | பி.இ. | 5-20 | ,, | கன்னி |
| | 16உ | (1-11-86) | காலை | 9-15 | ,, | துலாம் |
| | 18உ | (3-11-86) | பகல் | 10-35 | ,, | விருச்சிகம் |
| | 20உ | (5-11-86) | பகல் | 11-02 | ,, | தனுசு |
| | 22உ | (7-11-86) | பகல் | 12-20 | ,, | மகரம் |
| | 24உ | (9-11-86) | பகல் | 3-48 | ,, | கும்பம் |
| | 26உ | (11-11-86) | இரவு | 9-58 | ,, | மீனம் |
| | 29உ | (14-11-86) | காலை | 6-40 | ,, | மேடம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஐப்பசி மீ 30 உ பகல் 10-00 மணிக்கு தனுசு லக்னம் என அறிந்து கொண்ட பின் 'தனுசு' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1 முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது மகரம் உதயலக்கினமாக அமைகிறது. லக்கினத்தில் செவ்வாய் இருந்து சனியின் பார்வையைப் பெறுவது நன்றல்ல. அமைதிக்குப் பங்கம் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். சூரியன் பாபர் மத்தியில் நீசமடைந்திருப்பதால் அரசியல் நிலைமையில் பல தாக்கங்கள் ஏற்படலாம். பொதுவாக நாட்டில் பதற்றநிலை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

# ஐப்பசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

17-10-86 — 15-11-86

| | | |
|---|---|---|
| சூரியன்:- | 17-10-86 | பகல் மணி 1-54ல் துலாராசிப் பிரவேசம். |
| | 18-10-86 | உதயம் காலை 6-02<br>அஸ்தமனம் மாலை 5-50 |
| | 15-11-86 | உதயம் காலை 6-07<br>அஸ்தமனம் மாலை 5-42 |
| சந்திரன்:- | 17-10-86 | பூரணை இரவு 12-52 |
| | 26-10-86 | அபர அஷ்டமி மாலை 4-51 |
| | 2-11-86 | அமாவாசை பகல் 11-32 |
| | 3-11-86 | சந்திரதர்சனம் |
| | 9-11-86 | பூர்வ அஷ்டமி பகல் 2-02 |

## கிரகங்கள்

**புதன்:-** சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்கு வானில் 24பாகை உயரத்தில் தோற்றும். இக்கிரகம் 21-10-86ல் சூரியனிலிருந்து கூடிய தூரம் விலகி 24பாகை உயரத்திலேயே காணப்படும். பின் அதன் உயரம் குறைந்து வரும்; 2-11-86ல் வக்கிரகதியில் செல்லத் தொடங்கும். 8-11-86ல் மேற்கில் அஸ்தமனமடையும். 23-10-86ல் விருச்சிக ராசியில் பிரவேசிக்கும் இக்கிரகம் வக்கிர கதியில் 10-11-86ல் துலாராசியிற் பிரவேசிக்கிறது.

**சுக்கிரன்:-** மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் மேற்கு வானில் 25 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் 2-11-86ல் மேற்கில் அஸ்தமனமடையும். திரும்ப 9-11-86ல் கிழக்கில் உதயமாகும்; இம்மாசம் முழுவதும் வக்கிர கதியில் துலாராசியிலேயே சஞ்சரிக்கிறது. மாத முடிவில் சூரிய உதயம்முன் கீழ்வானில் 15 பாகை உயரத்திற் காணப்படும்.

**செவ்வாய்:-** மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் உச்சிக்கு கிழக்கே 12பாகையில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சியிற் காணப்படும். இம்மாசம் முழுவதும் மகரராசியிலேயே சஞ்சரிக்கிறது.

**வியாழன்:-** மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் கீழ்வானில் 38 பாகை உயரத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இக்கிரகம் மாதமுடிவில் 69 பாகை உயரத்திற் காணப்படும். வக்கிர கதியிற் சென்று கொண்டிருந்த இக்கிரகம் 10-11-86லிருந்து நேர்கதியிற் செல்லத் தொடங்கும். கும்பராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 18-10-86ல் வக்கிரகதியில் சதயம் 4-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

**சனி:-** மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின் பின் மேற்கு வானில் 44 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 18 பாகை உயரத்திற் காணப்படும். விருச்சிகராசியிற் சஞ்சரிக்கும் இக்கிரகம் 19-10-86ல் அனுசம் 4ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

**இந்திரன்:-** விருச்சிகராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 6-11-86ல் கேட்டை 4ம் பாதத்திற் பிரவேசிக்கிறது;

**வருணன்:-** தனுராசியிற் சஞ்சரிக்கும் இக்கிரகம் 2-11-86ல் மூலம் 4ம் பாதத்திற் பிரவேசிக்கிறது;

**குபேரன்:-** துலாராசியில் சஞ்சரிக்கும் இக்கிரகம் 24-10-86ல் சுவாதி 3ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

## சமாகமாதிகள்

17/18-10-86 பின் இரவு பூரண சந்திர கிரகணம். ஸ்பர்சம் 10-59, பூரண கிரகண ஆரம்பம் 12-11, மத்யம் 12-48, பூரண கிரகண முடிபு 1-25, மோக்ஷம் 2-37.

18-10-86 முன்னிரவு சுக்கிரனுக்கு வடக்கு புதன் 4 பாகை.

3-11-86 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு புதன் $\frac{3}{4}$ பாகை.

4-11-86 நண்பகல் சந்திரனுக்கு வடக்கு சனி 6 பாகை. அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

9-11-86 உதயம் முன் சந்திரனுக்கு வடக்கு செவ்வாய் 3 பாகை. அஸ்தமனத்தின் மேல் அவதானிக்கவும்.

10-11-86 நள்ளிரவு சந்திரனுக்கு வடக்கு வியாழன் 2பாகை; சந்திரஅஸ்தமனம் முன் அவதானிக்கவும்.

# புத சந்தரணம்

## (Transit of Mercury)

ஐப்பசி மாதம் 28உ (13-11-86) வியாழக்கிழமை முற்பகல் புத சந்த ரணக் காட்சி நிகழும். இக்காட்சியை தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியுடன் பார்க்கவேண்டும்.

புத சந்தரணம் என்பது சூரியபிம்பத்தின் மேல் புதன் என்னும் கிரகம் ஊர்ந்து செல்வதுபோல் பூமியிலுள்ளோர்க்குத் தோற்றும் ஓரழகான காட்சி யாகும்.

இலங்கையில் காலை மணி 7-14 தொடக்கம் பகல் 12-01 மணி வரை இக்காட்சியைப் பார்க்கலாம்.

முக்கிய குறிப்பு:- புத சந்தரணக் காட்சியை தொலைநோக்குக் கண் ணாடி (Telescope) மூலம் பார்க்க விரும்புபவர்கள் யாழ்ப்பாணம், 167, கஸ் தூரியார் றோட்டில் அமைந்துள்ள யாழ் வானியற் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இப்புத சந்தரணக் காட்சியால் நாம் அறிவதென்ன? இக்காட்சி நிகழும் சமயத்தில் சூரியனும் புதனும் ஒரே ராசியில், ஒரே நட்சத்திர பாதத்தில் ஒரே பாகை (Longitude) யில் இருக்குமென்பதல்லவா? பஞ்சாங்க கணிதத்தில் ஏற்படும் சரிபிழைகளை அறிந்துகொள்வதற்கு இது ஓர் அரியசந்தர்ப்பமாகும். திருக்கணித பஞ்சாங்கத்தை எடுத்துப் பாருங்கள். 37-ம் பக்கத்தில் ஐப்பசி 28உ காலை 7மணிக்கு சூரியன் விசாகம் 3-ம் பாதத்தில் இருக்கிறது. 39-ம் பக்கத் தில் புதன் பாதசாரம் அன்று காலை 7மணிக்கு விசாகம் 3-ம் பாதத்தில் இருக்கி றது. எனவே இருகிரகங்களும் ஒரே நட்சத்திர பாதத்தில் வருவதால் திருக் கணிதப்படி புதசந்தரணம் நிகழும் எனக்கூறலாம்.

வாக்கிய பஞ்சாங்கத்தில் 40-ம் பக்கம் சூரியன் பாதசாரத்தில் குறித்த ஐப்பசி 28-ம் தேதி சூரியன் விசாகம் 3-ம் பாதத்தில் இருக்கிறது. 42-ம் பக் கத்தில் புதன் அன்று சுவாதி 2-ம் பாதத்தில் இருக்கிறது. எனவே சூரியனுக் கும் புதனுக்குமிடையில் ஏறக்குறைய 16 பாகை தூரம் இருக்கிறது. ஆதலால் வாக்கிய பஞ்சாங்கப்படி புத சந்தரணம் நிகழ இடமில்லை.

உண்மையில் புதசந்தரணம் நிகழப்போகிறது. பலர் தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலம் இதனைப் பார்ப்பார்கள். இதிலிருந்து திருக்கணித பஞ்சாங்கமே சரியான கிரகநிலைகளைக் காட்டுகிறது என்பதை யாவரும் அறிந்துகொள்ளலாம்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.


**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது;

## (ஐப்பசி மாதம் 1-ந் தேதீ முதல் 30-ந் தேதீ வரை)

(சூரிய உதயம் 6 மணி 02 நிமிஷம்)

| வாரம் | 6...02<br>7...02 | 7...02<br>8...02 | 8...02<br>9...02 | 9...02<br>10...02 | 10...02<br>11...02 | 11...02<br>12...02 | 12...02<br>1...02 | 1...02<br>2...02 | 2...02<br>3...02 | 3...02<br>4...02 | 4...02<br>5...02 | 5...02<br>6...02 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்;




**இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.**

**17-10-86 முதல் 15-11-86 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு விதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் ஜெனனமானவர்கட்கு இந்த மாதம் சூரியபகவான் 7ல் லோகமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நல்லதல்ல. ஆனல் குருபகவான் 11ல் பலம்பெறுவதால் அதிகம் தாக்கங்கள் ஏற்படமாட்டாது. தேகசுகம் குடும்பசுகம் எல்பன சுமாராக இருக்கும். வருமானம் குறைவுறும்; செலவுகளும் அதிகரிக்கும். எடுத்த முயற்சிகள் தடை தாமதங்களின் மத்தியிலும் நிறைவுபெறும். பந்துமித்திரர் உறவுகளில் விரிசல்கள் ஏற்படும். புத்திரர் உதவிகள் இவர்களுக்கு ஆறுதல் தரும். போக்குவரவில் துன்பம், அலைச்சல் முதலான துன்பங்களும் ஏற்படக்கூடும்.

குடும்பத்தவர்களுக்கு பலப்பல பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றிமறையும். குடும்பத்தில் தவிர்க்கமுடியாத செலவுகள் ஏற்படுதலால் கடன் பிரச்சினைகளும் ஏற்படும். வீட்டில் மங்கல நிகழ்ச்சிகளும் நிகழலாம்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காவிட்டாலும் நட்டம் ஏற்படமாட்டாது. முதலீடுகளின் வருமானம் குறைவுறும். நிலுவைகளும் எதிர்பார்த்தபடி கைக்குவந்து சேராது.

உத்தியோகத்தர்களுக்கு பதவிப் பொறுப்புக்களும் வேலைப்பழுவும் கூடுவதால் மனஅமைதி குன்றும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இந்த மாதமும் உற்பத்திக் குறைவே தொடரும், பயிர்ப் பாதுகாப்பில் செலவுகள் அதிகரிக்கும்; கடன் பிரச்சினைகளும் இவர்களுக்கு ஏற்படவே செய்யும்.

தொழிலாளர் மத்தியில் வேலைவாய்ப்புக்கள் குறைவதால் அமைதிக்குறைவு ஏற்படும். தொழில்

பிரச்சினைகள் வலுவடையும். தொழில் ஒப்பந்தங்களும் நிறைவேற்றுவதில் பல பிரச்சினைகள் ஏற்படும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் தொடரும். ஆனால் கல்வி அதிகாரிகளின் கெடுபிடிச் சட்டதிட்டங்களும் இவர்களுக்கு தடைக்கல்லாக அமையும். பரீட்சை முடிவுகள் திருப்திதரும்.

பெண்களுக்குச் சோதனையான காலம். குடும்ப சுகவீனம் முதலியவற்றால் குடும்பத்தில் பாதிப்புக்கள் ஏற்படும். எனினும் கன்னிப் பெண்களுக்கு விவாக முயற்சிகள் கைகூடிவரும். வீட்டில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: அக். 18,19,23,24,28,29.
நவ. 6,10,11,15.

துரதிஷ்ட நாட்கள்: அக். 17,30,31.
நவ. 1,3,4,12,13,14



## இடபம்

கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசிரிடம் 1,2

இடபராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 6ல் தாம்பரமூர்த்தியாகிப் பவனி வருகிறார். கடந்த காலங்களிலும் பார்க்க சூரிய பகவான் சற்றுப்பலம்பெறுவது இவர்களுக்கு ஆறுதல் தரும். இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். வருமானம் ஓரளவு அதிகரிக்கும். பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும். எனினும் எதிர்பாராத அநாவசியச் செலவுகளும் இடம்பெறவே செய்யும். முன்பு தடைப்பட்டிருந்த காரியங்களில் வெற்றியும் பெறுவர். அலைச்சல், இடப்பிரிவு, புத்திரர் துன்பம் முதலானவையும் சிலருக்கு ஏற்படவே செய்யும்.

குடும்பத்தவர்கட்கு சிக்கல்களும் சிரமங்களும் அடிக்கடி ஏற்படும். குடும்ப சுகவீனம் துன்பம் தரும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். கணவன் மனைவி உறவும் சீர்கெடும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை ஏற்படும். பழைய முதலீடுகளில் வருமானம் குறைவுறும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. சிலருக்குச் சத்துரு பயமும் ஏற்பட இடமுண்டு.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படும்; சக உத்தியோகத்தர்களுடைய ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு இடமாற்றங்கள் பதவிமாற்றங்களும் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிருற்பத்தி பாதிப்புறும். மருந்து, மானியம் முதலியன உரியகாலத்தில் கிடையாது, விளைவும் குறைவுறும். சந்தைப்படுத்துவதில் சிரமங்களும் வீண் செலவுகளுமேற்படும்.

தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புக்கள் குறைவுறும். தினக்கூலி வேலைசெய்வோருக்கு நாளாந்த சீவியத்திற்கே கஷ்டம் ஏற்படும். தொழில் ஒப்பந்த வேலைகளும் லாபம் தரமாட்டா.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். மாணவர் மத்தியில் ஏமாற்றம் அக்கறையின்மை மறதி முதலான குணங்களால் கல்வித்தேர்ச்சியும் குன்றும். ஆசிரியர் - மாணவர் கருத்துவேறுபாடுகளும் வலுப்பெறும்.

பெண்களுக்குச் சோதனையான காலம். கன்னிப்பெண்களின் காதல்முயற்சிகள் ஏமாற்றம் அல்லது தோல்விகளைத் தழுவினாலும் ஆச்சரியமில்லை. குடும்பப் பெண்களுக்கு எதிர்பாராத திடீர்நெருக்கடிகளைச் சமாளிக்க நேரிடும்.

அதிஷ்ட நாட்கள்: அக். 17,21,26,27,30,31.
நவ. 1,8,9,12,13,14.

துரதிஷ்ட நாட்கள்: அக். 18,19,20.
நவ. 2,3,6,15.



## மிதுனம்

மிருகசிரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

இவ்விராசியில் ஜெனனமானவர்களுக்குச் சூரியபகவான் 5ல் சுவர்ணமூர்த்தியாகிப் பவனிவருகிறார். தேகநலம், குடும்பநலம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானமும் அதிகரிக்கும். எடுத்த காரியங்கள் சாதகமாக நிறைவேறும். இராசாங்க உதவிகள் பெரியோர்கள் உதவிகளும் கிடைக்கும். தன்வீட்டில் அல்லது குடும்பத்தில் சுபசந்தோஷ கொண்டாட்டங்களும் நிகழ இடமுண்டு. எனினும் செவ்வாய் அட்டமத்தில் சஞ்சாரம் செய்தலின் விபத்து - அவமிருத்து - கருவி

விஷஅக்கினி ஆயுதபயம் குடும்ப கலகம் அல்லது சுகவீனங்களும் சிலருக்கு ஏற்படவும் கூடும்.

குடும்பத்தில் கணவன் மனைவி நல்லுறவு வளரும்; சில சமயங்களில் குடும்பகலகம் பிணி, பீடைகளும் ஏற்படவும் செய்யும். எவ்வாறாயினும் குடும்பவருமானம் கூடும். வீட்டில் மங்கல கொண்டாட்டங்களும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். முதலீடுகளில் லாபம் கிடைக்கும். புது முதலீடுகள் செய்ய ஏற்றகாலம். முன்பு அறவிட முடியாத நிலுவைகள்கூட வந்து கிடைக்கும்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் நல்லெண்ணம் கிடைக்கும். சகஉத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். மனநிறைவான இடமாற்றம்கூடக் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச் செழிப்பும் உற்பத்திப் பெருக்கும் ஏற்படும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். விவசாயப் பண்ணைகளிலும் விளைவுகள் அதிகரிக்கும்.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் மனநிறைவாகக் கிடைக்கும். தினச்சம்பள வேலையாட்களுக்கும் வருமானம் கூடுதலால் சீவனநிறைவு ஏற்படும். தொழிலாளர் முதலாளிகள் நல்லுறவு வளரும்.

மாணவர் கல்வி முன்னேற்றம்காணும். கணித மருத்துவத்துறை மாணவர்கள் விசேட தேர்ச்சி பெறுவர். சிலருக்குப் புலமைப்பரிசில்கள் கூடக் கிடைக்கும்.

பெண்களுக்கு மனநிறைவான காலம். இவ்வளவு காலமும் தடைப்பட்டிருந்த விவாக முயற்சிகள்கூடக் கைகூடும். கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் குடும்பப் பெண்களுக்குக்கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: அக். 18,19,23,24,28,29.
நவ. 1,2,10,11,14,15.
துரதிஷ்ட நாட்கள்: அக். 20,21,22.
நவ: 3,4,5,8,9.



## கடகம்

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம் கடகராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 4ல் ரஜதமூர்த்தியாகி வலம் வருவது நன்மையாகும். கடந்த காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து விடுதலை இவர்களுக்கு கிடைக்கும். தேகநலம் சீராக இருக்கும். வருமானமும் அதிகரிக்கும். இராசாங்க உதவிகளும் கிடைக்கும். வீட்டில் மங்கல நிகழ்ச்சிகள் இடம் பெறுவிட்டாலும் அமைதி ஏற்படும். ஆனால் குரு முதலிய பெரியவர்களுடன் கருத்து வேறுபாடுகளும் ஏற்படும். புத்திரர் பந்துமித்திரர்களால் அநாவசியச் செலவுகளும் திடீர் நெருக்கடிகளும் ஏற்படும். சில சமயங்களில் சோரசத்துரு விபத்து அவமிருத்து பயமும் ஏற்படக்கூடும்.

குடும்பத்தவர்களுக்கு வருமானத்திலும் செலவுகள் கூடிக்கொண்டே இருக்கும். கணவன் மனைவி உறவிலும் விரிசல் ஏற்படும். புத்திரர் உதவிகளுக்குப் பதில் உபத்திரவங்களே அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் வருமானம் குன்றும். வாடிக்கையாளரின் வருகையும் வீழ்ச்சியுறும். ஆனால் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் லாபம்பெறுவர்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளின் பாராட்டுக்கள் அவ்வப்போது கிடைத்தாலும் வேலைப் பொறுப்புக்களும் கூடிக்கொண்டேபோகும். உடன் ஊழியர்களுடன் கருத்துவேறுபாடுகளும் ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் ஏற்பட்டாலும் அரசமானியம் - பசளை - மருந்து முதலியன கிடைப்பதால் சமாளித்துக்கொள்ளுவார்கள். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் ஓரளவு திருப்தி தரும்.

தொழிலாளர் வேலைவாய்ப்புக்கள் குறைவடையும். தொழில் பிணக்குகளால் இவர்களின் வருமானம் வீழ்ச்சியுறும். தொழில் ஒப்பந்தவேலைகளையும் லாபகரமாகச் செய்யமுடியாது.

மாணவர் கல்வியூக்கம் குன்றும். ஆசிரிய மாணவர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் வலுப்பெறும். மாணவர் மத்தியில் வெறுப்புணர்ச்சியும் அக்கறையின்மையும் தோன்றும்: பரீட்சை முடிவுகளும் எதிர்பார்த்தபடி அமையாது.

பெண்களுக்கு மனஅமைதிக்குறைவே அடிக்கடி ஏற்படும். கன்னிப்பெண்களின் விவாகமுயற்சிகள் கேள்விக்குறியிலேயே இருக்கும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் நெருக்குதல்கள் அதிகரிக்கும். குடும்பசுகவீனம் கவலைதரும்.

அதிஷ்ட நாட்கள்: அக். 17,21,22,26,27,31.
நவ: 1,3,4,12,13.

துரதிஷ்ட நாட்கள்: அக். 23,24,25;
நவ. 6,9,10,11.




மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 8ல் லோகமூர்த்தியாகி வலம் வருகிறார். இவர் தானபெலம் பெற்றாலும் மூர்த்திபெலம் இல்லாமல் போவது நன்மை தர மாட்டாது. பொதுவாக உடல் உளப் பாதிப்புக்கள் இவர்களுக்கு ஏற்படும். சிந்தனைக் குறைவுடன் அவசர முடிவுகள் எடுப்பதால் எடுத்த காரியங்களில் சிக்கல்களும் முடிவில் அவமானங்களும் ஏற்படும். வீண்விரயமும் பொய்யான படாடோப வாழ்க்கையும் இவர்களின் சுய கௌரவத்தையும் பாதிக்கச் செய்யும். வருமானம் குன்றும், கடன் பளு ஏறும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடப்பினும் மனநிறைவு தராது. நண்பர்களும் சமயத்தில் விரோதிகளாக மாறியும் விடுவர். தசாபுக்தி அந்தர பெலமுள்ளவர்கள் அதிகம் பாதிப்படைய மாட்டார்கள். மற்றவர்களுக்குத் தெய்வ துணை தான் வேண்டும்.

குடும்பத்தில் நல்லுறவு ஏற்படும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் திடீர் நெருக்கடிகளும் செலவுகளும் ஏற்படுதலால் அமைதிக் குறைவும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை அடையும். பழைய நிலுவைகள் கைக்குவராது தடைப்படும். முதலீடுகளில் வருமானம் பெருமளவில் குறையும். புது முதலீடுகளை தவிர்க்கலாம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கட்டாய உத்தரவுகள் இக்கட்டான நிலைமைகளை ஏற்படுத்தும். சக ஊழியர்களின் உதவி ஒத்தாசைகள் இவர்களுக்கு ஆறுதல் தரும்.

விவசாயிகளுக்கு பயிரழிவு ஏற்படவே செய்யும் கூலியாட்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். விவசாயப் பண்ணைகளின் வருமானம் குன்றினும் நட்டம் ஏற்படாது.

தொழிலாளர் வேலைவாய்ப்பு குறைவுறும். ஆனால் தொழிலாளர் மத்தியில் பிணக்குகள்-பூசல்கள் அதிகம் ஏற்படமாட்டாது. தொழில் ஒப்பந்த வேலைகளால் அதிகலாபம் கிடையாமல் போகும்.

மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சிகள் அதிகரிக்கும். மாணவரின் சுயமுயற்சியால் கல்வித் தேர்ச்சியும் பெறுவர். மருத்துவத்துறை சட்டத்துறை மாணவர்கள் விசேட சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு எண்ணங்கள் நிறைவுபெற வாய்ப்புகள் கிடைக்கும். விவாக முயற்சிகளும் பெரும்பாலும் நிறைவுபெறும்.

அதிஷ்டநாட்கள்: அக். 18,19,23,24,28,29
நவ. 1பகல் 2,6,14பகல்,15
துரதிஷ்டநாட்கள்: அக். 17,25பகல்,26,27
நவ. 8,9பகல்,12,13, 14காலை




உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2 கால்

இந்தராசியில் ஜெனனமானவர்களுக்குச் சூரிய பகவான் 2ல் தாம்ரமூர்த்தியாகி வலம் வருகிறார். இவர் மூர்த்திபெலம் குறைவது நன்மைதரமாட்டாது. பொதுவாக இவர்களின் உடல்நலம் அடிக்கடி குறைவுறும். எங்கும் எதிலும் இவர்களுக்கு எதிர்ப்பும் ஏமாற்றங்களும் ஏற்படும். பொருள் வருமானமும் குறையும். மனஅமைதிக் குறைவும் எதையோ பறிகொடுத்தவர் நிலையில் இவர்கள் நடமாடினாலும் ஆச்சரியமில்லை. சிலர் அந்நிய தேச சஞ்சாரம் அலைச்சல்களையும் தழுவுவர். ஆனால் அந்நியர் உதவி அந்நிய தேசப் பொருள் வரவுகளும் கிடைக்கும். குடும்பத்தில் அல்லது வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நிகழ அவ்வளவு வாய்ப்புகள் இல்லை.

குடும்பத்தில் சச்சரவுகளும் பிணக்குகளும் ஏற்படும். குடும்ப சுகவீனம் எதிர்பாராத திடீர் நெருக்கடிகளை ஏற்படுத்தும். குடும்ப வருமானமும் பெருமளவில் வீழ்ச்சியுறும்.

வர்த்தகர்களுக்கு மாத ஆரம்பத்தில் சுறுசுறுப்புடன் இயங்கிவந்த வியாபாரம் மாதக் கடைசியில் மந்த நிலையடையும். முதலீடுகளின் வருமானம் வீழ்ச்சியுறும்.

உத்தியோகத்தர்களுக்கு கடந்த காலங்களிலும் இந்தமாதம் பலப்பல சிரமங்களை எதிர்

நோக்க வேண்டியிருக்கும். மேலதிகாரிகளின் கண்டனங்களுக்கும் இவர்கள் ஆளாக வேண்டிவரும்.

விவசாயிகளுக்கு பயிர்ச் செழிப்பும் விளைவும் அதிகரிக்கும். ஆனால் விளைவுகள் கைக்கெட்டினாலும் வாய்க்கெட்டாக் கதைபோல் சந்தைப் படுத்துதலில் சுரண்டப்படும்.

தொழிலாளருக்குள் நல்லிணக்கம் ஏற்படும். வேலைவாய்ப்புகளும் சாதாரணமாக கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளில் எதிர் பார்த்த லாபம் கிடையாவிட்டாலும் நட்டம் ஏற்படாது.

மாணவர் சுயமுயற்சியுடன் கல்வியில் ஊக்கம் பெறுவர். கணித-விஞ்ஞானத்துறை மாணவர்கள் விசேட சித்தி பெறுவர். வெளிநாட்டு கல்விவாய்ப்பு கூட சிலருக்கு கிடைக்கும்.

பெண்களுக்குச் சோதனை மிகுந்த காலம். பெரும்பாலும் இவர்களின் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்படும். சிலருக்கு விநோதமான நோய்களும் ஏற்படலாம்.

அதிஷ்டநாட்கள்: அக். 21,22பகல்,26,27,31
நவ. 1காலை,3பகல்,4,8,9பகல்
துரதிஷ்டநாட்கள்: அக். 18,19,20மு.ப. 28,30
நவ. 9இரவு 10,11, 14பகல்,15




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

துலாராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் ரஜதமூர்த்தியாகி வலம்வருவது நன்மையாகும். இவருக்குத் திரிகோணத்தில் குருபகவானின் சஞ்சார திருஷ்டி பெறுவதும் சிறப்பாகும். உடல்நலம், குடும்பநலம் என்பன சீராக இருக்கும். கணிசமான அளவு வருமானமும் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்களின் உதவிகளும் அவ்வப்போது கிடைக்கும். வீட்டில் அல்லது குடும்பத்தில் மங்கலகரமான சுபசந்தோஷ கொண்டாட்டங்கள் கூட நிகழலாம். ஏழரைச் சனீஸ்வரனின் காலமும் சூரியனின் சென்மகோசாரமும் சேருவதால் மேற்கூறிய பலன்கள் மட்டுப்படுத்தப்பட்டு அலைச்சல், வீண் விரயம், தாயாதிகளால் துன்பம் முதலானபலன்களும் கலந்துநிகழும்.

குடும்ப நல்லுறவு வளரும். குடும்ப வருமானம் சிறப்பாக முன்னேறும். புத்திரர்களின் விவாகம் முதலிய சுபசோபனங்கள் வீட்டில் நிகழும். புத்திரர் உதவிகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் நல்ல வருமானம் கிடைக்கும். வாடிக்கையாளரின் வரவும் கணிசமான அளவுகூடும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் வியாபாரம் முன்னேற்றமடையும்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் நன்மதிப்பும் கிடைக்கும். சிலருக்குப் பதவியுயர்ச்சியும் கிடைக்கும். ஆனால் வேலைப்பொறுப்புக்கள் அதிகரிப்பால் ஆறுதல் கிடையாது.

விவசாயிகளுக்குப் பயிரழிவும் உற்பத்திச்செலவும் கூடும். கூலியாட்களும் சமயத்திற்கு உதவமாட்டார்கள். விவசாயப் பண்ணைகளிலும் வருமானத்திலும் செலவுகளே கூடுவதால் நட்டமேற்படும்.

தொழிலாளர் பிணக்குகள் கூடுதலால் கிடைக்கும் வேலைவாய்ப்புக்களையும் இழக்க நேரிடும். தொழில் ஒப்பந்தங்கள் உரியகாலத்தில் நிறைவேற்ற முடியாது. கடன்பயமும் தொடரும்.

மாணவர் (கல்விக் குழப்பநிலையிலும்) சுறுசுறுப்பும் சுயமுயற்சியும் வளரும். சிலருக்கு வெளிநாட்டுக் கல்வியைத் தொடரவும் வாய்ப்புக் கிடைக்கும். கணித மருத்துவத்துறை மாணவர் விசேட சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு மனநிறைவு ஏற்படும். கணவன்மாரின்அன்பும் அரவணைப்பும் கிடைக்கும். வீட்டில் விவாகாதி சுபசோபன நிகழ்ச்சிகளும் நடைபெறும். கன்னிப் பெண்களின் காதல் முயற்சிகளும் மனம்போல் நிறைவுறும்.

அதிஷ்ட நாட்கள்: அக். 23,24,25,28,29.
நவ. 1,2,3,10,11.
துரதிஷ்ட நாட்கள்: அக். 17,21,22,30,31.
நவ. 1,12,13,14.




விசாகம் 4, அனுஷம், கேட்டை

விருச்சிக ராசியில் ஜெனனமானவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 12ல் சுவர்ணமூர்த்தியாகி வலம்வருவது நன்மையாகும். கடந்தகாலங்களிலும் பார்க்க இவர்களின் உடல்நலம் குடும்ப

நலம் என்பவற்றில் அபிவிருத்தி ஏற்படும்: வருமானமும் கணிசமான அளவு கூடும். அரசாங்க உதவிகளும் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டு நண்பர்கள் உறவினர்களின் உதவிகளும் கிடைப்பதுடன் வெளிநாட்டு பிரயாண வசதிகளும் கிடைக்கும். சூரியன் மூர்த்திபலம் பெற்றாலும் விரயத்தில் இருப்பதும் சனியின் குரூரசஞ்சாரமும் சேருவதும் அநாவசியச் செலவுகளும் போக்குவரவுகள் மூலம் துன்பம் முதலானவையும் கலந்து நிகழவே செய்யும்.

குடும்பத்தில் கணவன் மனைவி நல்லுறவு வளரும். குடும்பத்தில் திடீர் நெருக்கடிகள் எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்தாலும் குடும்பப்பெரியவர்களின் உதவிகள் கிடைப்பதால் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் லாபம்தராவிட்டாலும் நட்டம் தராது. வங்கி நிதி வசதிகளும் கடந்தகாலங்களிலும் திருப்திதரும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் அதிகலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்ச்சி பதவிச் சிறப்பு என்பனவும் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் அவ்வப்போது கிடைக்கும்; சிலருக்கு விரும்பிய இடமாற்றங்களுமுண்டு.

விவசாயிகட்கு பயிருற்பத்தி குன்றும். பூச்சி புழுக்கள் வரட்சி முதலான இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிரழிவும் தொடரும். விவசாயப் பண்ணைகளிலும் உற்பத்திச் செலவுகளே கூடும்.

தொழிலாளர் வருமானம் குறைவுறும்; வேலை நிறுத்தம் முதலான சம்பவங்களால் கிடைக்கும் வேலைகளையும் செய்யமுடியாத நிலை ஏற்படும். ஒப்பந்த தொழில்களிலும் வேலையாட்களின் ஒத்துழைப்புக் கிடையாது.

மாணவர் கல்விக்குழப்பநிலை தொடரும். ஆனால் மாணவர் மத்தியில் தன்நம்பிக்கையும் சுயமுயற்சியும் வலுப்பெறும். மருத்துவத்துறை சட்டத்துறை மாணவர் சிறப்புச்சித்தி பெறுவர்:

பெண்களுக்கு ஓரளவு மனஅமைதி கிட்டும். விவாக முயற்சிகளும் முன்னேற்றம் காணும். கணவன்மாரின் ஒத்துழைப்பும் கிடைக்கும். மனஅடக்கத்தால் செலவுகளைக் கட்டுப்படுத்தி குடும்ப அமைதியைப் பெறலாம்.

அதிஷ்டநாட்கள்: அக். 17,25பக. 26,27,30பகல்
நவ. 3பக.4,8,9பக.12,13

துரதிஷ்டநாட்கள்: அக். 18,19,22இரவு,23,24
நவ. 1பக.2,3காலை,14பக.15



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம், 1-ம் கால்

தனுசு இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் லாபத்தில் 11ல் லோக மூர்த்தியாகி வலம் வருகின்றார். சூரியன் தான பலம் பெற்றாலும் மூர்த்திபலம் இல்லாமல் போவது துர்அதிஷ்டமே. மேலும் குரூரகோசார குருவும், ஏழரைச் சனீஸ்வரனுமாகப் பிரதான கிரகங்களின் துர்க் கோசார சஞ்சாரமும் நிகழ்வது நன்மை தராது. பொதுவாக இவர்களின் உடல்நலம் பாதிக்கப்படும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். இனபந்துக்கள்-புத்திரர்களால் மனவேதனைகள் துக்கசம்பவங்களும் நிகழும். எடுத்த முயற்சிகளில் தடைதாமதங்கள், பிரதி கூலங்களும் ஏற்படும்: சனிதசை-சனிபுத்தி நிகழுபவர்களுக்குக் கடின காலமாகும். தெய்வ பக்தியால் எதனையும் சமாளித்துக் கொள்ளலாம்.

குடும்பத்தவர்களுக்கு சிறுச்சிறு சச்சரவுகள் வாக்குவிரோதங்கள்-பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். புத்திரர்-உறவினர் துன்பங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை ஏற்படும். பொறுமையின்மையும், முற்கோபமும், வாடிக்கையாளர் வருகையை குறையச் செய்யும். கறுப்புச்சந்தை வியாபாரிகள் தண்டனை பெறுவர்.

உத்தியோகத்தரின் வேலைப்பழு அதிகரிக்கும். ஒருபுறம் அதிகாரிகள் மறுபுறம் பொதுமக்கள் நெருக்கடிகள் இவர்களுக்கு ஏற்படும். சக ஊழியர்கள் கருத்து மோததலும் அடிக்கடி ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் தொடரும். விளைந்த பொருட்களுக்கும் தரகர் முதலியோரின் சுரண்டுதலும் இவர்களுக்கு வேதனைதரும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் அதிகரிக்கும்.

தொழிலாளர் வேலையின்மையால் அல்லல் படுவர். தொழில் குழப்பங்கள் வேலைநிறுத்தங்கள் முதலியவற்றால் இவர்களின் வருமானம் குன்றும், தொழில் ஒப்பந்த வேலைகள் நிறைவுபெறாது.


மாணவர் மத்தியில் ஏமாற்றமும்-வெறுப்புணர்ச்சியும் அதிகரிக்கும். கல்விக்கூடங்களில்

இளர்களின் வரவும் குன்றும். கல்வித் தேர்ச்சி யும் திருப்தி தரமாட்டாது.

பெண்களுக்கு ஆசைகளை அடக்க வேண்டிய மாதம். வீட்டில் சந்தோஷ சுபநிகழ்ச்சிகள் பெரும் பாலும் நிகழாது. குடும்பச் செலவுகள் அதிகரிப் பால் திடீர் நெருக்கடிகளும் தோன்றும்.

அதிஷ்டநாட்கள்: அக். 18,19,28,29
நவ. 1பகல்,2,6,10,11,14பகல்

துரதிஷ்டநாட்கள்: அக். 21,22பகல்,25பகல்,26
நவ. 3பகல்,4,5மு.ப.




உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2

இந்தராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 10ல் சுவர்ணமூர்த்தியாகி வலம் வருவது சிறப்பாகும். மற்றும் பிரதான கிரகங் களான வியாழன்-சனி ஆகியவர்களும் கோசார பலம் பெறுவதும் நன்மையாகும். பொதுவாக இவர்களுக்கு உடல்நலம் சிறப்பாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் காரிய சித்தியும் ஏற்படும். வருமானமும் கூடும்; எதிர்பாராத பொருள்வர வும் சிலருக்குக் கிடைக்கும். வீட்டில் சுபசந்தோஷ கொண்டாட்டங்கள் நிகழும். புண்ணிய தலயாத் திரை-தேவப்பிரபுக்கள் பெரியோர் தரிசனங்க ளால் மனநிறைவு முதலானவை நிகழும், எனி னும் வாகனச் சேதம் போக்குவரவில் துன்பங்க ளும் சிலருக்கு இடம்பெறக் கூடும்.

குடும்பத்தில் மனஅமைதி ஏற்படும். கணவன் மனைவி உறவுகள் வளரும். புத்திரர் பௌத்திரர் உறவினர் கொண்டாட்டங்களும். உதவிகளும் குடும்பத்தில் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் கூடும். வாடிக்கையாளர்களின் வருகையும் ஆத ரவும் வளரும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர் கள், மொத்தவியாபாரிகள் அதிகலாபம் பெறுவர்'

உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்ச்சி அல் லது பதவிச் சிறப்புக்களும் அதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். உடன் உத்தியோ கத்தர்கள் பொதுமக்களின் ஆதரவு வளரும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி கணிசமான அளவு முன்னேற்றம் காணும். விவசாயப் பண் ணைகளிலும் விளைவுகள் கூடும்; விளைவுகளுக்கு நல்ல சந்தைவாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக் கும்; தொழிலாளர் பிரச்சனைகள் தரமாட்டார் கள். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் வருமான மும் கூடும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெறுவர். சட்டத்துறை மாணவருக்கு சிறப்பான முன்னேற் றம் கிடைக்கும். பரீட்சைத் தேர்ச்சிகளும் பெறு வர். சிலருக்கு உயர்கல்வி வாய்ப்பு கிடைக்கும்.

பெண்களுக்கு மனநிறைவு தரும் மாதம். இவ் வளவு காலமும் இழுபறியில் முடிவுறுத விவாக முயற்சிகளும் கைகூடி வரும். கன்னிப் பெண்க ளின் காதல் விவகாரங்களும் முன்னேற்றம் தரும்.

அதிஷ்டநாட்கள்: அக். 17,21,22பகல்,30பகல்
நவ. 3பகல் 4, 7பி.ப. 8,9பகல்

துரதிஷ்டநாட்கள்: அக். 22இரவு, 23,24,28,29
நவ. 5பி.ப.6,7மு.ப.




அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்பராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 9ல் தாம்ர மூர்த்தியாகி வலம் வருவது நன்மை கலந்த தீய பலன்களே நிகழும். தேகாரோக்கியம் பெரும்பாலும் சீராக இராது; எடுத்த முயற்சிகளிலெல்லாம் தடைதா மதங்கள் ஏற்படும். சிரமங்களுக்குள்ளேயே காரிய சித்தி ஏற்படும்; அந்நியர் உதவி, அந்நிய நாட் டுப் பொருள் வரவுகளும் சிலருக்குக் கிடைக்கும். எனினும் வருமானத்திலும் செலவுகளே அதிகம் ஏற்படும். எதனையோ பறிகொடுத்தவர் நிலையில் மனவேதனையுடன் நடமாடுவர். தசாபுத்தி அந்தர பலமுடையவர்கள் அதிகம் பாதிப்படைய மாட் டார்கள். மற்றவர்களுக்கு இஷ்ட தெய்வ பக்தி தான் சாந்தி தரும்.

குடும்பத்தில் பிணிபீடைகள் அடிக்கடி ஏற்ப டும், சிலருக்குக் குடும்பப் பிரிவுகள் கூட ஏற்ப டும். புத்திரர் உதவிகள் கிடையாது. கணவன் மனைவி உறவுகளும் சீர்கெடும்;

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையடையும். முதலீடுகள் லாபந்தர மாட்டாது. நிதிக் கையிருப்பும் குறையும். கறுப்புச்சந்தை வியாபாரிகளுக்குப் பெருநட்டம் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வேலைப்பளு தாங்க முடியாதபடி வளரும். சிலர் தாமதமாகவே பதவியை விலகிச் சென்றாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளின் பயிர் உற்பத்தி சுமாராக இருக்கும். விவசாயப் பண்ணைகளிலும் உற்பத்திச் செலவுகள் கூடும்; விளைபொருள்களுக்குச் சந்தை வசதி கிடைக்கும்.


தொழிலாளருக்கு வேலை வசதிகள் குறையும்; தினசம்பள வேலையாட்களுக்கு நாளாந்த சீவியத்துக்கு வேலைவசதிகள் கிடைக்கும். தொழில் பிணக்குகளும் அவ்வப்போது தோன்றும்.

மாணவர் கல்வியூக்கம் குன்றும். மாணவர் மத்தியில் அதிருப்தியும்-ஏமாற்றமும் ஏற்படும். கல்வித் தேர்ச்சிகளும் திருப்தி தரமாட்டாது.

பெண்களுக்கு பொறுமைக்கு சோதனையான காலம். கன்னிப் பெண்கள் முன் எச்சரிக்கை தவறினால் ஏமாற்றப் படுவார்கள். விவாக முயற்சிகள் அலைச்சலுடன் முடிவில்லாமல் நீண்டாலும் ஆச்சரியமில்லை;

அதிஷ்டநாட்கள்: அக். 18,19,23,24,25காலை
நவ. 1பக.2,3காலை6,10,11

துரதிஷ்டநாட்கள்: அக். 25பக.26,27,30பக.31
நவ. 1காலை 7பி.ப. 8,9பகல்



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் அட்டமத்தில் 8ல் ரஜஸமூர்த்தியாகி வலம் வருவது சமபலன்களைக் கொடுக்கும். சூரியன் மூர்த்திபலம் பெற்றுள்ளதால் பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். வருமானமும் ஓரளவு முன்னேற்றமடையும்; முன்பு தடைப்பட்டிருந்த காரியங்கள் சாதகமாக நிறைவுபெறும். வியாழன் 12ல் சஞ்சரித்தலின் எடுத்த காரியங்களில் வீண் அலைச்சல் குரு முதலிய பெரியவர்களுடன் விரோதித்தல் முதலியனவும் நிகழும். சிலருக்கு அந்நியர் உதவி அந்நியநாட்டுப் பயணம் முதலியனவும் நரம்பு, இரத்தம் சம்பந்தமான வியாதிகளும் ஏற்படவும் கூடும்.

குடும்பத்தில் வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். கணவன் மனைவி உறவுகளும் பாதிப்படையும். புத்திரர்-குரு முதலியவர்களால் கவலைகள் ஏற்படும், கடன் பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு புதன் கோசார பலம் பெறுவதால் மாத ஆரம்பத்திலும் மாதக் கடைசியிலும் வியாபாரம் முன்னேற்றம் காணும். மாத நடுப்பகுதியில் வியாபாரம் மந்தநிலை அடையும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நல்லெண்ணம் கிடைக்கும். சிலருக்குப்பதவி உறுதிப் படுத்தப்படும். உத்தியோகத்துக்குரிய பதவிச் சிறப்புக்களும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்செழிப்பு மகிழ்ச்சி தந்தாலும் இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிரழிவும் ஏற்படும். கூலியாட்களின் கெடுபிடிகளும் அதிகரிக்கும். பண்ணைகளில் வருமானம் குறையும்.

தொழிலாளர் வேலைவாய்ப்புக்கள் ஓரளவு பெறுவர். தினச்சம்பள வேலையாட்களுக்கும் நாளாந்த சீவனத்துக்கு வேலைகள் கிடைக்கும். தொழிலாளர் மத்தியில் பிணக்குகள் குறையும்.

மாணவர் சுயமுயற்சி அதிகரிக்கும்; கல்விக்கூடங்களில் கதவடைப்புக்கள் நிகழ்ந்தாலும் விடா ஊக்கத்துடன் கல்வித் தேர்ச்சி பெறுவர். கணித-மருத்துவத்துறை மாணவர்கள் விசேடசித்தியுடன் உயர்கல்வி வாய்ப்பும் பெறுவர்.

பெண்களுக்கு உடல்நலம் பெரிதும் பாதிப்படையும். விவாக முயற்சிகளும் அலைச்சலைக் கொடுக்கும்; குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் சுகவீனம் முதலான பிரச்சினைகள் ஏற்படும்

அதிஷ்டநாட்கள்: அக். 17,21,22பக.25பக.26
நவ. 3பக.4,8,9பக.12,13

துரதிஷ்டநாட்கள்: அக். 23,29,30அ.காலை
நவ. 1பக.2,3காலை10,11

கணித சுத்தமும் நுட்பமும் உடையது
**திருக்கணித பஞ்சாங்கம்**

# எண் சோதிடமும் அதன் உண்மைகளும்

## 2. எண்களும் கிரகங்களும்

முதன்முதலாக எண்களின் இரகசியம் சரித்திர காலத்திற்கு முன்பேயே வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் திட்டவட்டமாக எந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது; பதிவு செய்யப்பட்டது என்பது தெரியவில்லை.

நமது முறையில் ஒன்பது கிரகங்கள் மட்டுமே இருக்கின்றன; இதேபோல எண்களும் ஒன்பது இருக்கின்றன. இந்த ஒன்பது எண்களுக்கு அப்பால் வருவனவெல்லாம் திரும்பத் திரும்ப வருபவையே. எவ்வளவு உயர்ந்த எண்ணாக இருந்தபோதிலும் எல்லாவற்றையும் ஒரு இலக்க எண்ணாக மாற்றிவிடலாம்.

ஒன்பது அடிப்படை எண்கள்தான் ஒன்பது கிரகங்களுக்கும் வகுக்கப்பட்டுள்ளன. இவைகளிலும் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன.

'பவானி' — பருத்தித்துறை

சூரியனிடமிருந்து வெடித்துச் சிதறியவைதான் மற்றக் கோள்கள். மற்றக் கோள்கள் யாவையும் தன் சக்தியால் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செய்வதால் அவைகள் பணிந்து சூரியனை வலம் வருகின்றன. இதேபோல் சூரியனைக் குறிக்கும் எண் ஒன்றுதான் ஆரம்பம். இதிலிருந்துதான் மற்ற எண்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன. சில எண்களின் குறியீடுகளை சற்று உற்றுநோக்கும்போது இவ்வுண்மை நன்கு புலனாகின்றது. எல்லாவெண்களுக்கும் அடிப்படையானதுஒன்றுதான்.

சந்திரன் சூரியனிலிருந்து தோன்றியதுமல்லாது அதன் ஒளிக்கு சூரியனை நம்பியிருக்கிறது. சூரியன் இல்லாமல் சந்திரனுக்கு ஒளியேது? எனவேதான் சூரியனுக்கு அடுத்ததாக சந்திரனுக்கு, எண் 1க்கு அடுத்ததாக உள்ள எண் 2ஐ வகுத்தார்கள்.

அன்று மேலைநாட்டினர் பின்வரும் முறையில் எண்களைக் கிரகங்களுக்கு வகுத்தார்கள்.

| | |
|---|---|
| சூரியன் | 1 & 4 |
| சந்திரன் | 2 & 7 |
| செவ்வாய் | 9 |
| புதன் | 5 |
| குரு | 3 |
| சுக்கிரன் | 6 |
| சனி | 8 |

ஆனால் தற்காலத்தில் இவர்கள் பின்பற்றும் முறையில் சூரியன் -1, யுறேனஸ் -4, சந்திரன்- 2, நெப்ரியூன் -7 என்ற சிறுமாற்றங்கள் காணப்படுகின்றன.

பூமியில் வாழும் எமக்குக் கீழேயும் மேலேயும் எல்லாப் பக்கங்களிலும் வான வெளியே நம்மை வளைத்துக் கொண்டிருக்கின்றது. இதனால்தான் நாம் மற்றக்கிரகங்களை அவதானிக்க முடிகிறது. எனவே எங்களைப் பொறுத்த வரையில் பூமிதான் வானவெளியின் மையமாக இருக்கின்றது. பூமியைச் சுற்றி மற்றக் கோள்கள் வலம் வருகின்றன.

பூமியில் இருப்பவர்களுக்கு வலம்வராத சூரியன்கூட பூமியைச் சுற்றிச்சுற்றி வருவதுபோல் தோற்றம் அளிக்கிறது. இதனால் தான் பகலும் இரவும் ஏற்படுகிறது என்ற எண்ணமும் ஏற்படுகிறது.

இப்படியாக பூமியைச் சுற்றி வலம்வரும் கோள்கள் ஒவ்வொன்றும் பூமியின்மீது ஒவ்வொரு நாளும் பூரண ஆதிக்கம் செலுத்துகின்றன. எந்த நாளில் எந்தக் கோள் ஆதிக்கம் செலுத்துகின்றதோ அந்த நாள் அக்கோளின் பெயரால் வழங்கப்படுகிறது.

இதனால் ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை முதலிய நாட்களின் முறையே சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய கிரகங்கள் ஆதிக்கம் செலுத்துவதாகக் கருதினார்கள்.

கோள்களின் தலைவனாகிய சூரியனின் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையை வாரத்தின் முதல் நாளாகக் கருதினர்கள். இதனால் தான் வாரத்தின் ஒழுங்குப்படி ஞாயிற்றுக்கிழமையில் ஆதிக்கம் செலுத்தும் சூரியனுக்கு எண் 1ம், இரண்டாம் நாளாகிய திங்கட்கிழமையில் ஆதிக்கம் செலுத்தும் சந்திரனுக்கு எண் 2ம், மூன்றும் நாளாகிய செவ்வாய்க் கிழமையில் ஆதிக்கம் செலுத்தும் செவ்வாய்க்கு எண் 3ம் வகுத்தார்கள். இதேபோல் புதன், வியாழன், வெள்ளி, சனி முதலியோர்க்கு முறையே எண் 4,5,6,7ம் வகுத்தனர். இதைத்தான் மகரிஷி பராசரர் தனது (Brihatparasarahora) "பிரிகத்பராசரஹோரை" யில் கூறியிருக்கின்றார்.

இம்முறை தவறானதாகும். வானவெளியில் நாம் இருக்கும் பூமிதான் மையமாகக் காட்சி அளிப்பதும், பூமியைச் சுற்றி மற்றக் கோள்கள் வலம்வருவதும் வெறும் பிரமையே; வானியல் அறிவு இல்லாததினால் வந்த விளைவாகும்.

வானவெளியில் சூரியன் தான் மையமாக அமைந்திருக்கின்றான். அவனைச் சுற்றித்தான் மற்ற எல்லாக் கோள்களும் வருகின்றன. பூமியைச் சுற்றி எந்தக் கிரகமும் வலம்வரவில்லை. உபக்கிரகமாகிய (Satellite) சந்திரன் மட்டுமே வலம் வருகிறது.

வீதியில் நாம் மோட்டார்வாகனத்தில் செல்லும்போது வீதி நமக்குப் பின்புறமாகச் செல்வது போல் சில சமயத்தில் தோற்றம் அளிக்கின்றது; இது வெறும் பிரமையே. உண்மையில் நாம்தான் ஓடிக்கொண்டிருக்கின்றோம். இதேபோன்றதுதான் பூமியை மற்றக் கோள்கள் வலம்வருகின்றது என்ற தோற்றம்.

வெறும் பிரமையால் எழுந்த கருத்தின்படி ஏழு கிரகங்களுக்கும் ஏழுஎண்களை வகுத்துவிட்டு எஞ்சிய (8,9) எண்களை முறையே ராகுவிற்கும் கேதுவிற்கும் வகுத்துவிட்டார்கள்.

இதன்படி சூரியன்-1, சந்திரன்-2, செவ்வாய் -3, புதன்-4, வியாழன்-5, வெள்ளி-6, சனி-7, ராகு-8, கேது-9 ஆகும். அடிப்படை எண்களில் கடைசி இரு எண்களையும், (8,9) இராகு கேது விற்கு வகுத்த காரணம் வாரத்தில் இவர்களுக்கு நாட்கள் காணப்படவில்லை என்பதாகும்.

எனவே இவ்வொழுங்கின்படி கிரகங்களுக்கு எண்ணை வகுத்தால் அது வெறும் மாயையாகும். மாயை என்றால் அறியாமை. செயல் முறையிலும் இது பலன் அளிக்கத் தவறியமையால் இதை எவரும் பின்பற்றவில்லை. அதனால் இம்முறையும் மகாரிஷி பராசரருடன் மறைந்துவிட்டது. இவ்விதம் கூறுவதற்கு என்னை எவரும் தவறாக நினைக்கக்கூடாது.

இன்று விஞ்ஞானயுகம். அன்று இராமன் இலங்கைக்கு வர கடலைக் கடக்கவேண்டியிருந்தது; அதற்கு அணில்களையும் வானரங்களையும் நாடினான். அவர்களின் உதவியுடன் பாலத்தை அமைத்து இலங்கைக்கு வந்தான். இன்றைய விஞ்ஞானிகள் தம்து ஆராய்ச்சித் திறமையினாலும், திட்டவட்டமான கணிப்பினாலும் சந்திரமண்டலத்திற்கும் சென்று வந்தார்கள். இதில் யாருடைய சாதனை சிறந்தது? பக்தி வேறு, போதனை வேறு, சாதனை வேறு. பக்தி உடையவனெல்லாம் சாதனைக்குரியவனல்ல. அன்றெல்லாம் பல முனிவர்கள் பல கண்டுபிடிப்புக்களை மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் முறைகள் – கண்டுபிடிப்புகள் – எவ்வளவு தூரம் இன்று சரியாக அமைகின்றது என்பதைத்தான் கவனிக்க வேண்டும். இதனால் அவர்களைக் கண்மூடித்தனமாகக் குறைகூறுவதாக நினைக்கக்கூடாது. அவர்கள் 18 சித்தாந்தங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். உதாரணத்திற்கு ஒரு குறிப்பிட்ட வேளையில் சந்திரனின் ஸ்புடநிலையை அறியவேண்டும். வேறுபாடான பதில்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளில் ஒன்று சரியானதாக இருக்கலாம் அல்லது பதினெட்டும் பிழையானதாகஇருக்கலாம். இதனால் எந்த முனிவரின் கூற்று சரியெனக் கொள்வது? திறமையும் தெய்வபக்தியும் நிறைந்திருந்தாலும் அவர்கள் கூறுவதெல்லாம் சரியாக அமையுமா?

அன்று உபகரணங்களுமின்றி கிடைத்த கணிப்புகள் யாவும் சரியாக அமையுமா? அவர்களுக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டதால்தானே பல சித்தாந்தங்கள் தோன்றின. விஞ்ஞானம் என்றும் ஒரேமாதிரி தேங்கியிருந்ததில்லை. நாளுக்கு நாள் விருத்தியும் வளர்ச்சியும் அடைந்திருக்கின்றது. அன்று அவர்கள் எழுதிய கவிகளையும் சுலோகங்களையும் தொடர்ந்து நாமும் கூறிவருகின்றோமேயொழிய அதன்படி பலன்களும் நடந்திருக்கின்றதா என்ன? சோதிடத்தில் சேஷாத்திரி ஐயர் K. S. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்தான் சில ஆராய்ச்சிகள் செய்து விருத்திசெய்திருக்கிறார்கள். இதேபோல் எண்சோதிடத்திலும் சில ஆராய்ச்சிகள் செய்து என்கருத்தைக் கூறியிருக்கின்றேன்.

இதை நீங்கள் நம்பிக்கையுடன் செயற்படுத்தி அதன் பலனை அவதானித்துப்பாருங்கள். உண்மை புலனாகும். நம்பிக்கை வீண்போவதில்லை. மனிதனின் தவறுகள் விஞ்ஞானத்தின் தவறுகளாகக் கருதப்படக் கூடாது.

அடுத்து வாரத்தில் ஒவ்வொரு நாட்களிலும் ஒவ்வொரு கிரகங்கள் ஆதிக்கம் செலுத்துவது சரியென ஏற்கப்படுமானால் ஏன் அவ்வரிசைப்படி எண்களையும் வகுக்கக்கூடாது என்ற வினா எழும்புகிறது.

வாரத்திலுள்ள நாட்களுக்கு கோள்களை அல்லது கிரகங்களை வகுக்கும்போது சூரிய சித்தாந்தத்தின்படி இம்முறையைக் கையாண்டார்கள். சூரியனிலிருந்து எல்லாக் கிரகங்களையும் அவைகளின் தூரத்திற்கு ஏற்ப வரிசைப்படுத்தினார்கள். அவை சனி, வியாழன், செவ்வாய் (பூமி) வெள்ளி புதன் (சூரியன்) சந்திரன் ஆகும். பூமியிலிருந்து கணிப்புக்களை ஆராய்வதால் பூமியையும் சூரியனைப்போல் வலம்வராத கிரகமாகக் கருதினார்கள். இதனால் இவ்வரிசை சனி, வியாழன், செவ்வாய் சூரியன் (பூமிக்குப் பதிலாக), வெள்ளி, புதன், சந்திரனாக மாறியது. தூரத்தைப் பொறுத்தமட்டில் இவ்வரிசையில் சந்திரன் கடைசி இடத்தை பெற்றது விசித்திரமானது. இவைகளில் சந்திரன் மட்டுமே பூமியின் உபக்கிரகமாக இருந்தபடியால் வரிசையில் கடைசியிடத்தைப் பெற்றதா? இதே பாதையில் வியாழனைச் சுற்றி 12 உபக்கிரகங்களும் (Satelittes), செவ்வாயைச் சுற்றி 2 சிறிய உபக் கிரகங்களும் காணப்படுகிறதே அவைகளை ஏன் கணக்கில் எடுக்கவில்லை? என்று எவரும் வினவக்கூடாது: இவைகளை எல்லாம் வல்ல முனிவர்களும் யோகிகளும் கண்டுபிடித்தனர். அவர்களின் ஞானக் கண்களில் இவை மட்டுமே புலனாகியது, இவைகளை மட்டுமேவைத்துக்கொண்டுசோதிடரீதியில் உலகின்கண் நடக்கப்போகும் பலசங்கதிகளைக் கூறினார்கள். வியாழனைச் சுற்றிவரும் உபக்கிரகங்களும், செவ்வாயைச் சுற்றிவரும் உபக்கிரகங்களும் சமீபத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டன. (வளரும்)

---

முக்கிய குறிப்பு:

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும்: கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ-ர்

---

# விருச்சிக லக்கின ஆணும் கடக லக்கின் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

இவ்விரு நபர்களும் மன எழுச்சியாலும் உள்ளுணர்வாலும் உந்தப்படுபவர்கள்: அவர்கள் பங்கிட்டுக் கொள்ளும் பந்தம் வழமையாக அசாதாரணமாக பெலமானதாகும். அவர் நெஞ்சார நேசிப்பவர். நம்பிக்கையில் ஸ்திரமானவர். சகலதையும் கொடுக்கும் ஆற்றலுடையவர். தங்களுடைய பந்தபாசங்களில் கண்ணும் கருத்துமுடையவர். அவளுடைய எண்ணங்களும் சிந்தனைகளும் அவருடையதே போலானதால் கடக லக்கினகாரி தன்னில் புருஷன் சந்தேகங்கொள்ளவோ அல்லது அவ நம்பிக்கை வைக்கவோ தக்கதாக ஒருபோதும் நடந்துகொள்ள மாட்டாள். அவர் கடினமாக உழைப்பவர். ஆகையால் இளைப்பாற அவருக்கு நிம்மதியான வீடு தேவை. இதனால் அவருடைய தினசரி களைப்பினின்றும் தேறுவார். இன்னுமொரு பெண்ணை இச்சையுடன் ஒருகாலும் பார்க்க மாட்டார். தனது மனைவியிலேயே பெண்மை முழுவதையும் காணுவார். அவளுக்குத் தேவைக்கதிகமாக் தேவைகளை கொடுப்பவர்களை அவன் கவனிக்கும் போது சிலவேளைகளில் அவனுக்கு அவர்களில் வெறுப்பை உண்டுபண்ணும். இயற்கையாக கடககாரி கண்டனகாரி யானாலும் இவருக்கு அவள் பெரு மதிப்புக் காட்டுவாள். தன்னுடைய குற்றச் சாட்டுக்களை எப்படிப்பட்ட சொற்களால் அமைக்க வேண்டுமென்பதை அவள் நன்கு அறிவாள்.

பாலியலில் அவன் அவளை முற்றுமுழுதாக தன்வசமாக்கி விடுவான். அவள் ஒரு விலையுயர்ந்தவளென்று அவளை அவன் உணரச் செய்வான். பிறிதோர் மனிதருடன் அவள் சக்தியுடையவளாக இருப்பதிலும் பார்க்க அவன் கூடிய சக்தியுடையவனாவான். இந்த உறவில் பாலியலுக்கு அவளுக்கு அன்பான நெருங்குமுறை மிகவும் பரந்திருக்கும். மிகவும் சுயாதீனமாக அவளால் தெளிவாக உரைக்க முடியும். அதனால் அவள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவளாவாள்;

மிகவும் திறமான ஒரு சோடி;

# கோள்களும் கால அளவுகளும்

— பிரம்மஸ்ரீ நா. கந்தசாமிஐயர் – கோண்டாவில் —

(ஆனி மாதத் தொடர்...)

**மாச அளவும் அதிலேற்பட்ட மாற்றங்களும்**

சூரியனால் மூலஅளவான தினம் ஏற்பட்டது போல் அடுத்த பெரிய அளவான மாசம் சந்திரனால் ஏற்பட்டதென முன்னர் கூறப்பட்டது.

சந்திரன் பூமியைச் சுற்றிவருகின்ற ஓர் உபக்கிரகம். அது பூமியை ஒருமுறை சுற்றிவர 27 நாள் 7மணி 43நி. 11செ. செல்லும். இது சந்திரனின் நக்ஷத்திரசார்புச் சுற்றோட்ட காலம் (Sidereal revolution of the moon round the Earth) என்று சொல்லப்படும். இதன் காரணமாகவே இராசிமண்டலம் ஒவ்வொன்றும் 13பாகை 20கலை கொண்ட 27 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அப்பிரிவுகளுக்கு அசுவினி முதல் ரேவதி ஈறாக முறையே பெயரிட்டு அந்நக்ஷத்திரப் பிரிவுகளை சந்திரன் அவ்வக்காலம் பெறும் கதியைக்கொண்டு கடந்துசெல்லும் காலத்தைக் கணித்து 27 நக்ஷத்திர காலங்களையும் பஞ்சாங்கங்களில் வெளியிட்டு வருகின்றனர்.

நக்ஷத்திரப்பிரிவு ஏற்படுவதற்கு மிக முன்னதாகவே சந்திரனின் பிறைத் தோற்றங்களை அவதானித்த பூர்வீக மனிதன் சந்திரன் சூரியனிலிருந்து விலகிச் செல்லும்பொழுது பிறை வளர்வதையும் சூரியனுக்கு எதிரில் நிற்கும்பொழுது பூரண சந்திரனாகத் தோற்றுவதையும், பின் சூரியனை நோக்கிச் செல்லும்பொழுது பிறைத்தோற்றம் தேய்ந்து வருவதையும் சூரியனோடு சேர்ந்து நிற்கும்பொழுது இருதினங்கள் தோற்றமலிருப்பதையும் அவதானித்தான். இதற்குரிய காலம் ஏறக்குறைய 30 நாட்கள் என்பதையும் அக்காலத்தில் வளர்பிறையில் பிரதமை முதல் பூரணை முடிய 15 திதிகளும் அவ்வாறே தேய்பிறையில் பிரதமை முதல் அமாவாசை முடிய 15 திதிகளுமாக 30 திதிகளும் (Phases of the moon) ஏற்படுகின்றன என்பதையும் கண்டறிந்தான். இது சந்திரனின் சூரியச்சார்புச் சுற்றோட்ட காலமாகும். (Heliacal revolution of the moon round the Earth) இதுவே சாந்திரமாசம் என அழைக்கப்படுகிறது. இதன் சரியான காலம் 29நாள் 12 மணி 44நி. 3செ. ஆகும். இக்காலத்திலேயே 30 திதிகளும் நிகழ்கின்றன. சூரியனிலிருந்து ஒவ்வொன்றும் 12 பாகைகொண்ட 30 திதிப் பிரிவுகள் வகுக்கப்பட்டன. இத்திதிப் பிரிவுகளைச் சந்திரன் சூரியனிலும் பார்க்கக் கூடிய வேகத்தினால் (சந்திரகதியில் சூரியகதி கழிக்கப்பட்ட வேகத்தால்) தாண்டிச் செல்லும் காலம் கணிக்கப்பட்டுப் பஞ்சாங்கங்களில் வெளியிடப்படுகிறது.

ஆகவே சந்திரனின் சுயகதியால் நக்ஷத்திரமும், சூரியகதி கழிக்கப்பட்ட சந்திரகதியால் திதியும் கணிக்கப்படுகின்றன என அறியலாம். மாசம் என்ற கால அளவுக்கு சந்திரனின் சூரியச்சார்புச் சுற்றோட்ட காலமே பொதுவாக எல்லோராலும் கொள்ளப்பட்டு பல நூற்றாண்டுகளாக வழக்கத்திலிருந்தது. இம்மாச ஆரம்பம் அமாவாசைக்கடுத்த பிரதமையிலிருந்து கொள்ளப்படும். ஆனால் வடஇந்தியாவில் பல இடங்களில் பூரணைக்கடுத்த பிரதமையிலிருந்து கணக்கிடப்படும் வழக்கமுண்டு. இஸ்லாமியர்கள் துவிதியைத் திதியன்று மாலை நிகழும் பிறைத் தோற்றத்திலிருந்து முகரம் முதலிய 12 மாதங்களைக் கணக்கிடுவார்கள்.

இந்தச் சாந்திர மாசங்களின் பெயர்கள் அமைந்த விதம் நுட்பமானது. ஒவ்வொரு மாசமும் பூரணை எந்த நக்ஷத்திரத்தில் நிகழ்கிறதோ அந்த நக்ஷத்திரத்தின் பெயரால் அவ்வம்மாசங்கள் அழைக்கப்பட்டன. இப்பெயர்கள் சமஸ்கிருதத்திலேயே அமைந்துள்ளன. சித்திரை நக்ஷத்திரத்தில் பூரணை நிகழும் மாசம் சைத்ரம் என்றும் விசாகத்தில் பூரணை நிகழும் மாசம் வைசாகம் என்றும் கேட்டையில் பூரணை நிகழும் மாசம் ஜேஷ்டம் என்றும் பூராடத்தில் பூரணை நிகழும் மாசம் ஆஷாடம் என்றும் திருவோணத்தில் பூரணை நிகழும் மாசம் சிராவணம் என்றும் உத்தரட்டாதி நக்ஷத்திரத்தில் பூரணை நிகழும் மாசம் பாத்ரபதம் என்றும் அச்சுவினியில் பூரணை நிகழும் மாசம் ஆஸ்வினம் என்றும் கார்த்திகையில்

பூரணை நிகழும் மாசம் கார்த்திகம் என்றும் மிருகசீரிடத்தில் பூரணை நிகழும் மாசம் மார்கம் என்றும் பூசத்தில் பூரணை நிகழும் மாசம் பௌஷம் என்றும் மகத்தில் பூரணை நிகழும் மாசம் மாகம் என்றும் உத்தரத்தில் பூரணை நிகழும் மாசம் பால்குனம் என்றும் சமஸ்கிருத நக்ஷத்திரப் பெயரால் வழங்கி வருகின்றன.

இம்மாசங்களே வெகுகாலம் வழக்கிலிருந்து வந்தன என்பதை ஸ்மிருதிகளில் இம்மாசங்கள் எடுத்தாளப்பட்டிருப்பதைக் கொண்டும் இம்மாசங்களின்படியே சகல விரதாதிகளும் நிர்ணயிக்கப்பட்டு இன்றும் வழக்கிலிருப்பதைக் கொண்டும் அறியலாம். இந்நிர்ணயங்களில் திதியுடன் நக்ஷத்திரமும் பல சந்தர்ப்பங்களிற் சேர்த்துக் கூறப்பட்டுள்ளன.

சாந்திரமாசம் ஏறக்குறைய 29½ நாட்கள் கொண்டது. அதனால் 12 மாசத்தில் 354 நாட்களே வருகின்றன. நாம் கைக்கொள்ளும் வருஷமோ 365¼ நாள் கொண்டது. ஆகவே காலஅளவில் 12மாசம் ஒரு வருடம் என்ற வாய்பாடு பொருத்தமற்றதாக இருக்கிறது.

இக்குறையை நிவிர்த்தி செய்யும் பொருட்டே நம்முன்னோரால் சூரிய மாசம் (சௌரமாசம் - Solar Month) அறிமுகஞ் செய்யப்பட்டது. சூரியன் ஒரு வருடத்தில் 12 இராசிகளில் சஞ்சரிப்பதனால் ஒவ்வொரு இராசியிலும் சூரியன் பிரவேசிக்கும் காலத்தைக் (சங்கிரமணம் அல்லது சங்கிராந்தி) கணித்து 12 சூரிய (சௌர) மாசங்களை வழக்கில் கொண்டுவந்தனர். இந்த மாசங்களின் மொத்த நாட்கள் 365¼ ஆகையால் 12 மாசம் ஒரு வருடமென்ற வாய்பாடு சரியாக அமைந்தது. இந்த வகையில் அமைந்த சௌர மாசங்களுக்கு நியாயமாகப் பெயரிடுவதானால் மேடமாசம், இடபமாசம் என 12 இராசிகளின் பெயராலேயே பெயரிடப்படவேண்டும். அவ்வாறே கேரளத்தில் வழங்கி வருகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் சாந்திரமாசங்களுக்குரிய பெயராலேயே சௌரமாசங்களையும் தமிழில் சில சிறிய மாற்றங்களோடு சித்திரை வைகாசி ஆனி என்று வழங்கிவருகிறார்கள்.

இப்பொழுது நம் நாட்டில்,

1. 12 சௌர மாசங்கள் 365¼ நாள் கொண்டது ஒரு சௌர வருடம்.
2. 12 சாந்திர மாசங்கள் 354 நாள் கொண்டது ஒரு சாந்திர வருடம்.

என்ற இருவகையான கால அளவுகள் வழக்கிலிருக்கின்றன. இருவகை வருடங்களுக்குமிடையில் 11 நாட்கள் வித்தியாசம் காணப்படுகிறது. எமது விரதாதிகளோ சாந்திர மாதங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றன; அதனால் சாந்திரமாசங்களைக் கொள்ளாது விடமுடியாது. அதனால் இருவகை வருடங்களையும் மாதங்களையும் ஒத்து இணங்கிச் செல்வதற்கு ஒரு வழி காணவேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறு செய்யாவிட்டால் சித்திரையோடு தொடர்புடைய சைத்ரம் 16-17 வருடங்களில் ஐப்பசியில் கொள்ளவேண்டிய விபரீதம் ஏற்படும். இந்த விபரீதத்தைத் தடுக்கும் நோக்கமாகப் பின்வரும் விதிகள் கணித சாஸ்திர ரீதியாக நம்முன்னோரால் மிக நுட்பமான முறையில் புகுத்தப்பட்டன.

(1) சாந்திர வருடப்பிறப்பு சித்திரை மாதப் பிறப்புக்கு (மேடசங்கிராந்தி) முன் நிகழும் அமாவாசைக்கடுத்த பிரதமையில் ஆரம்பிக்கப்படவேண்டும். (2) 36 சௌர மாசங்களில் 37 சாந்திர மாசங்கள் நிகழுமாதலால் ஒரு சாந்திர மாசத்தை நீக்கும் நோக்கமாக, எந்தச் சௌர மாசத்தில் ஒரு சாந்திரமாதம் தொடங்கி முடிகிறதோ அந்தச் சாந்திரமாசம் அதிகமாசமெனக் கணக்கிடாது விரதாதிகளுக்கு நீக்கப்பட வேண்டும் என்பதாகும். இதையே ஒரு மாசத்தில் இரண்டு அமாவாசை நிகழ்ந்தால் அதிகமாசம் வரும் என்று பொதுவாகக் கூறப்படுகிறது.

இஸ்லாமியர்கள் சாந்திரமாசங்களையே தனித்துக் கைக்கொள்வதனால் அவர்களுடைய முஹர மாசப் பிறப்பு (வருடப்பிறப்பு) ஒவ்வொரு ஆண்டிலும் 11 நாட்கள் வரை முன் நிகழ்வதை அவதானிக்கலாம்.

நாம் நடைமுறையில் கைக்கொள்ளும் கிறீஸ்தவ ஆண்டுக்குரிய ஜனுவரி முதலிய மாசங்களும் சூரிய மாசங்களே. ஆனால் அவற்றின் நாட்கணக்குகள் கணித்தறிய வேண்டிய தேவையின்றி நிர்ணயஞ் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு குறிப்பிட்ட திகதி கொண்ட மாதங்கள் லௌகீக நடைமுறைக்கு மிகவும் ஏற்றனவாகவே காணப்படுகின்றன. இதையொட்டியே இந்திய அரசாங்கமும் தேசிய கலண்டரில் வசந்தவிஷுவிலிருந்து (மார்ச் 22) வருடத்தை ஆரம்பித்து மார்ச் 22ல் சைத்ரமும், ஏப்ரில் 21ல் வைசாகமும், மே 22ல் ஜ்யேஷ்டமும், ஜூன் 22ல் ஆஷாடமும், ஜூலை 23ல் சிராவணமும், ஆகஸ்ட் 23ல் பாத்ரபதமும்,

(23ம் பக்கம் பார்க்க)

பிரஸ்ன சோதிடம்—Horary Astrology

# நடிகைகளில் ராணியாக வருவேனா?

எத்தனையோ சோதிடர்கள் இந்த ஞானபூமியில் இருக்கின்றார்கள். அவர்கள் எத்தனையோ பலன்கள் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறிய பலன்களில் எத்தனை சரியாக அமைந்தன? எத்தனை காலை வாரிவிட்டன? புள்ளிவிபரம் எவருக்கும் தெரியாது!

இதேபோல் சோதிடமேதை K. S: கிருஷ்ணமூர்த்தி ஜனனசாதகத்தை வைத்துக்கொண்டு பலருக்கும் பலன்கள் கூறிவந்தார். அவைகளிற் சில தவறிவிட்டன. அதை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

தனது சகோதரனுக்கு பலன் கூறியிருந்தார். அவரின் உதயலக்கினம் சரராசியில் அமைந்தபடியால் திருமணத்திற்கு வழக்கம்போல் 2,7,11-ம் வீடுகளை ஆராய்ந்து திருமண நாளையும் குறித்துக் கொடுத்தார். இங்கேதான் விதி தன் விளையாட்டைக் காட்டிவிட்டது. இவர் கூறிய பலனும் எதிர்மாறாய் அமைந்துவிட்டது!

எந்தத் திகதியில் திருமணம் நடக்கும் என்று குறித்துக் கொடுத்தாரோ அதே திகதியில் இவரின் சகோதரன் எதிர்பாராத விதத்தில் இறந்து போனார். 2,7-ம் வீடுகள் மாரக ஸ்தானங்களாயும் 11-ம் வீடு பாதகஸ்தானமாயும் அமைந்தபடியால் திருமணத்திற்குப் பதிலாக மரணம் ஏற்பட்டது. இச்சம்பவம் திரு. கிருஷ்ணமூர்த்திக்கு பெரும் கவலையையும் தாக்கத்தையும் கொடுத்தது.

இதன் பின்பு ஆழ்ந்த ஆராய்ச்சியில் இறங்கி பல வருட முயற்சியின்பின் பிரஸ்ன சோதிட முறையை அறிமுகப்படுத்தினார். இம்முறையைக் கையாண்டு, இங்கு ஒரு பெண்மணியின் கேள்விக்கு திட்டவட்டமாகப்(பதில்) பலன் சொல்கின்றார். இவர் கூற்றின்படி, சினிமா உலகில் இப்பெண் மிகச் சிறந்த நடிகையாக கொடிகட்டிப் பறந்தார். இப்பொழுது அரசியலிலும் சிலசாதனைகள் புரிந்து பிறரைப் பிரமிக்க வைக்கின்றார். இந்த இளவரசியைப்பற்றி நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன? இனி திரு. கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி கூறிய பலன்களை கவனிப்போம்.

"நான் ஒரு நடிகையாக வேண்டும் என்ற ஆழமான ஆசையிருக்கிறது. அதுவும் சிறந்த நடிகையாக வேண்டும். நடிகைகளில் இராணியாக வேண்டும். அப்படி என்றால் வரமுடியுமா ஐயா?"

"நீங்கள் நினைத்தபடி, விதியும் ஒத்துழைத்தால் நடிகைகளில் இராணியாக வரலாம். ஆனால் உங்கள் கேள்வி விசித்திரமாயிருக்கிறதே!" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

விளக்கம் தெரியாமல் வினாவிடுத்த பெண்மணி சிந்திக்கின்றார்.

"உங்கள் கேள்வியைப் பொறுத்தவரையில் சினிமா உலகில் நான் அறிந்த ஒரு சந்தோசமான விடயம் இதுதான். நடிகைகள் என்றும் எழிலுடன் இளவரசியாக இருப்பதுடன், என்றும் இளம் தோற்றம், துடிதுடிப்பு, நல்ல முயற்சியும் எடுப்பான தோற்றம்' வாளிப்பான மெல்லிய உடலுடன் இருத்தல் வேண்டும். நீ இராணியாகும் போது தாயாகி, காலத்தால் பாட்டியாகி, பூட்டியாகி மாறுவதால் தொடர்ச்சியாக இளவரசிக்குரிய கவர்ச்சியையும் அழகையும் நிலைநாட்ட முடியாது. எனவே எதைநீ விரும்புகின்றாய்?"

"நடிகைகளில் இளவரசியாகத் திகழ விரும்புகின்றேன் ஐயா!"

சிரித்துக்கொண்டே "அப்படியா? சரி, எண்கள் 1க்கும் 249க்கும் இடையில் ஏதாவது ஒரு எண்ணைக் கூறுங்கள்"

"எண் 32"

"சரி, எனது செயல்முறைகளையும் கணிப்புகளையும் சிறிது பிறர் கேட்கக்கூடிய விதத்தில் அமைதியாகக் கூறிக்கொண்டு வருகிறேன். இதனால் எனது அருகில் இருக்கும் நண்பர் குறிப்பெடுத்துக் கொள்வார். இது எனது மாதசஞ்சிகையில் வெளிவரும்."

"எனது பெயரைமட்டும் வெளியிடாதீர்கள்"

"பயப்படாதீர்கள். உங்கள் பெயர் வெளிவராது."

'பவானி' — பருத்தித்துறை.

நான் கண்டுபிடித்த இந்தப் புதிய முறைச் சோதிடத்திலும் எண்ணுக்கு ஒரு சாதகமமைத்தல் வேண்டும். இம்முறையைப் பற்றி அறியாத பலர் இதில் எதுவிதமான உண்மையும் புதுமையும் இல்லை என்று ஒதுங்கிக் கொள்கின்றார்கள். உண்மையில் நுனிப்புல் மேய்பவர்களுக்கு இம்முறையை சிறிதளவேனும் விளங்கிக்கொள்ளமுடியாது.

இனிமேல் (Krishnamurthi Sub Table)கிருஷ்ணமூர்த்தியின் 'உபநட்சத்திராதிபதி' அட்டவணையை எடுத்துக்கொள்ளுங்கள். எண் 32 எங்கு அமைகின்றது?

அது சுக்கிரராசி (இடபம்) சந்திரசாரம் (நட்சத்திரம்) குரு உபநட்சத்திரத்தில் அமைகின்றது. இது இடபம் 13° 53' 20'' தொடக்கம் 15° 40' வரையும் அமையும். எனவே 13° 53' 20'' இடபத்தை உதயலக்கினமாகக் கொள்ளவும்.

இப்பிரச்சனையைத் தீர்மானிக்கும் இடம் சென்னை. அதன் அக்ஷாம்சம் வடக்கு 13° 04'. இன்று 14-1-1969, செவ்வாய்க்கிழமை, நேரம் பிற்பகல் 1-30 மணி. அயனும்சம் 23° 20'.

இப்பொழுது நிராயன இலக்கினம் 13°53'20'' இடபத்தைச் சாயனத்திற்கு மாற்றும்போது (அயனும்சம் 23° 20'யை கூட்டவும்) 7° 13' 20'' மிதுனம் கிடைக்கின்றது. பாவஅட்டவணையில்(Table of Houses) சாயனமுறை கையாளப்படுவதால் நிராயனமுறையை சாயனமுறைக்கு மாற்றினேம்.

இப்பொழுது ரபேலின் பாவ அட்டவணையை (Raphael Table of Houses) பாவித்து அக்ஷாம்சம் 13 பாகையில் 7° 13' 20'' மிதுனத்திற்குரிய மற்றும்பாவமுனைகளையும் குறித்துக்கொள்ளுங்கள்.

2-ம் பாவமுனை — 4° 01' கடகம்
3-ம் பாவமுனை — 0° 01' சிங்கம்
10-ம் பாவமுனை — 28° 01' கும்பம்
11-ம் பாவமுனை — 0° 01' மேடம்
12-ம் பாவமுனை — 4° 01' இடபம்

எங்களுக்கு நிராயன நிலைகள் தேவைப்படுவதால் அயனும்சத்தை மேற்கூறியவற்றிலிருந்து கழிக்கவும்.

உதயலக்கினமுனை — 13° 53' 20'' இடபம்
2-ம் பாவமுனை — 10° 41' மிதுனம்
3-ம் பாவமுனை — 6° 41' கடகம்
10-ம் பாவமுனை — 4° 41' கும்பம்
11-ம் பாவமுனை — 6° 41' மீனம்
12-ம் பாவமுனை — 10° 41' மேடம்

மற்றும் பாவமுனைகள் இவைகளுக்கு நேர் எதிராக (180°) அமைகின்றன.

7-ம் பாவமுனை — 13° 53' 20'' விருச்சிகம்
8-ம் பாவமுனை — 10° 41' தனுசு
9-ம் பாவமுனை — 6° 41' மகரம்
4-ம் பாவமுனை — 4° 41' சிங்கம்
5-ம் பாவமுனை — 6° 41' கன்னி
6-ம் பாவமுனை — 10° 41' துலாம்

இப்போது பிற்பகல் 1-30 மணிக்கு கிரகங்களின் நிராயன ஸ்புடத்தைக் கணித்து சாதகத்தையமைக்கும்போது அது எப்படி அமையுமென்பதைப் பார்ப்போம். (மிகுதி அடுத்த மலரில்)

---

கோள்களும்...... (21-ம் பக்கத் தொடர்ச்சி)

செப்டம்பர் 23ல் ஆஸ்வினமும், அக்டோபர் 23ல் கார்த்திகமும், நவம்பர் 22ல் மார்கமும், டிஸம்பர் 22ல் பௌஷமும், ஜனுவரி 21ல் மாகமும், பெப்ருவரி 20ல் பால்குனமும் பிறப்பதாக அறிவித்துள்ளார்கள். இதன்படி ஆஸ்வினம் தொடக்கம் சைத்ரம் முடிய 7 மாதங்கள் 30 நாட்களும் வைசாகம் முதல் பாத்ரபதம் முடிய 5 மாதங்களும் 31 நாட்கள் கொண்டனவாகவும் அமையும். லீப் வருடம் வரும்பொழுது மாத்திரம் சைத்ரம் 31 நாட்கள் கொண்டதாக அமையும்.

(தொடரும்)

## மனமேறி விளையாடும்

மயிலேறி விளையாடும் முருகா — எந்தன்
மனமேறி விளையாடும்
எழில்ஞான குமரா! (மயிலேறி)

மயலாகி உலகாசை
மனதாள வாடும்...
செயலாகி தடுமாறும்
சிறியேனின் மனநாடும் (மயிலேறி)

குயிலாகி நான்மாறி
குமரா'உன் எழில்பாடி
பயிலாத ஞானத்தின்
படியேறி வருவேனே (மயிலேறி)

கலிகால வரதாஉன்
கழல்பாடும் அடியாருள்
வலியேனே அறியேனே
வழிகாட்டி அருள்காட்டி (மயிலேறி)

— கவிஞர் அகனங்கன்

# ஆய்வு மன்றம்

வ. கோகுலலோஜினி.
பிரதான வீதி, பருத்தித்துறை.

மெய்யான தெய்வ பக்தியுடன் முயற்சி செய்க. சனிதசையில் சனி புக்தியின் பின் மன நிறைவு பெற அதிகம் சார்பான காலம் வரும்.

எஸ். மதுரநாயகம். குருநகர், யாழ்ப்பாணம்.

உமது சாதகத்தின் கிரகநிலையில் செவ்வாய் 6ல் (இடபத்தில்) இருக்க வேண்டும். குருதசை உமக்கு சுபபலன்களை அதிகம் கொடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. உமது கஷ்டங்கள் எல்லாம் நீங்கி, வெகுவிரைவில் சனி மகாதசை நிகழும் போது மனநிறைவு பெற்று வாழ வழி பிறக்கும்.

திருமதி எஸ். சரஸ்வதி. டச்றோட், சண்டிலிப்பாய்.

சரியான சென்ன நேரம் தெரியாமல் திட்டவட்டமான பலனைக் கூறமுடியாது. ஆனால் உமக்குக் கோசார சஞ்சாரமும் சாதகமாக இல்லாதபடியால் செலவும், அலைச்சலும், ஏமாற்றமும் பரதேசவாசம்முதலான பலன்கள் நிகழவேண்டும் முயலுக.

அ. விக்டோரியாகெத்தரின் (செல்வி)
10ம் கட்டை, தெல்தெனியா.

கிரகநிலைக் கோட்டுடன் கூடிய புதிய விண்ணப்பப் படிவத்தில் உமது பிரச்சனைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தால் மாத்திரமே ஆய்வு மன்றம் பதில் அளிக்கும்.

எஸ். பிரபாகரன். யாழ்ப்பாணம்.

செவ்வாய் தோஷம் முதலான பல தோஷங்களுள்ள சாதகம். விவாகப் பேச்சும் முறிவுமாக நீண்டு கொண்டு போனாலும் போகலாம்.

ஆ. சிதம்பரநாதன். மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

பக்தி விசுவாசத்துடன் இஷ்ட தெய்வத்தை வழிபட்டு முயலுக. நடப்புக் குருதசையில் எண்ணம் கைகூடிவர எதிர்வரும் 1987 பெப்ருவரி 1-ம் திகதி முதல் குருபகவானும் உமக்குச் சாதகமான கோசார சஞ்சாரமும் செய்வார்.

சாமித்தம்பி சரவணமுத்து. துறைநீலாவணை.

உமது சென்ன நேரம் குறித்த நிலவு அடிக்கு இரவு 9மணி 01நிமிஷமாக இருக்கும்.

சசிதேவி சுப்பிரமணியம். கோவில் வீதி, நல்லூர்.

உமது சாதகத்தில் லக்கினத்தில் புதனும் 5ல் சனியுமாகக் கிரகநிலை திருத்தப்பட வேண்டும். அத்தகணிப்பின் படி 'முயற்சி திருவினையாக்கும்' எண்ணங்கள் நிறைவேற முயற்சி செய்க.

யோண் யோர்தான் யோகராசா.
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

சாதகம் சாதகமாக இருக்கிறது. ஆனால் நாளும் கோளும் கடவுளின் ஆணைக்குட்பட்டவை மத்தேயு - அதிகாரம் - 17 வசனம் 21ன் படி இருப்பின் நிச்சயம் எண்ணம் கைகூடும்.

வை. விஜயகுமாரி. சின்னமலை, தொண்டமனாறு.

சாதகக் கிரகநிலை சரியாக இருக்கிறது.

மு. பாலசுப்பிரமணியம்.
கும்பாவெளி-மந்துவில், கொடிகாமம்.

சாதகக் கணிப்பின் தவறுதல்கள் இருக்கின்றன. உமது சென்ன நட்சத்திரம் அவிட்டம் 1ம் பாதமாக இருக்கும் சரியான கணிப்பின்படி.

கே. எ. - மன்னார்.

தனத்தானதிபன் விரயத்தில் ராகுசேர்க்கை பெறுவதும், விரயத்தானதிபன் 4ல் இருப்பதும் நிலையான தனசௌகரியம் கிடைத்தாலும் வீண் விரையத்தால் அழிந்தும் போக இடமுண்டு. இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழப் பழகுவது உமக்கு நன்மைதரும்.

சிவனு ஆறுமுகம்.
இல. 3, சௌமியாபுரம், கொட்டக்கலை.

விண்ணப்பப் படிவத்தை கவனமாக வாசித்து அதிலுள்ள கிரகநிலை உட்பட எல்லாம் முறையாகப் பூர்த்தியாக எழுதி அனுப்பினால்த்தானே ஆய்வு மன்றம் பலன் எழுத முடியும்.

சின்னத்தம்பி சிவஞானம்.
ஸ்ரேசன் வீதி, கொக்குவில்.

தெய்வ அனுக்கிரகம் இருந்தால், பரீட்சையில் சித்தியும் ஏற்படச் சாதகமான காலம் முயற்சியைத் தொடரவும்.

சுமதி மூத்ததம்பி.
ஹேமவாசம்-8ம் கட்டை, தெல்லிப்பழை.

சாதகத்தின் கிரகநிலையில் புதன் இலக்கின ராசியிலும், சனி மீனத்திலும் சரியான கணிப்பின் படி இருக்கவேண்டும். கணித விஞ்ஞானத் துறைக் கல்வியிலும் முன்னேற முடியும்.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.




★

வள்ளுவர் நெறியில்
வையகம் வாழ்க!

★

உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீலசோப்பில் உள்ள 500 திருக்குறள் வசனத்தை வெட்டி அனுப்பி வரதராசனுர் உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகத்தை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 42-00 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 180-00 |
| | இங்கிலாந்து | (விமானவழி) | வருட சந்தா | ,, 225-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:
உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280